Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

க்கங்கள்-12

தம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-16 | 01-12-2005 | வியாழக்கிழமை | ஓசை-287

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx
Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835
(சி-13509)

# மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தேசிய பாதுகாப்பு சபைக்கூட்டம்!

## வீரர்தின உரை–பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

*...றிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதலாவது தேசிய பாதுகாப்புச் ...சைக்கூட்டம் நேற்று அவரின் செயலகத்தில் இடம்பெற்றது. இதில் மாவீரர் தின உரை மற்றும் ...துகாப்பு நிலவரங்கள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.*

...படி பாதுகாப்புச் சபைக் கூட்டம் ...று முற்பகல் 11 மணியளவில் ...ம்பமாகி சுமார் இரு மணிநேரம் ...ம்பெற்றுள்ளது. இதில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, முப் படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர், மற்றும் படைப்புலனாய்வு அதிகாரிகளும் கலந்துகொண்டனர். தமிழீழ தேசியத்தலைவரின் மாவீரர் தின உரையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் முக்கியமாக ஆராயப்பட்டதாகத்தெரிய (12ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டிக் கடலில் ரவைப்பெட்டி!

கற்பிட்டி கடலில் மிதந்த பெட்டி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.நேற்று அதிகாலை இந்தக் கடற்பகுதியில் மிதந்த பெட்டி ஒன்றை சிறிலங்கா கடற் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன்-ஹொக்லண்ட் இன்று சந்தித்துப் பேச்சு

(நமது செய்தியாளர்)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் இன்று சந்தித்துப் பேசவுள்ளார். இச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இடம்பெறும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ்டொட்டிரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

## ...கிந்தவின் கொள்கைப் பிரகடனம் மீது ...டிசம்பர்-7 பாராளுமன்றில் விவாதம்!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ...பக்ஷவின் கொள்கைப் பிரகடனம் ... எதிர்வரும் டிசம்பர் மாதம் ஏழாம் ...ன்று பாராளுமன்றில் விவாதம் ...பெறவுள்ளது.

...பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் ...டரை கடந்த 25 ஆம் நாள் ...ங்கி வைத்த சனாதிபதி மகிந்த ...பக்ஷ அன்றைய நாளில் தமது ...ள்கைப் பிரகடனத்தை தாக்கல் செய்தார்.

இது குறித்த விவாதத்தை பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதமாக நடத்துவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இதனையடுத்து கொள்கைப் பிரகடனம் தொடர்பிலான விவாதத்தின் போது வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுப்பதற்காக அன்றைய நாளில் அனைத்து அரசாங்க ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்களையும் சமூகமளிக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் வெளிநாட்டுப் பயணங்களை இரத்துச் செய்துள்ளனர். வர்த்தக மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சரும், அரசாங்கத் (12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் இன்று இந்தியப் பிரதமருடன் பேச்சு

*– அமைதி முயற்சிகள் குறித்து அறிவதிலும் நாட்டம்*

இந்தியா சென்றுள்ள சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்று இந்திய அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சகம் நேற்று புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்பு அவரது வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற மங்கள சமரவீர மேற்கொள்ளும் முதலாவது இந்தியப் பயணம் இதுவாகும்.

மங்கள சமரவீரவுடன் வெள்விவகார அமைச்சுச் செயலாளர் ஹெச்.எம்.ஜி.எஸ் பலி ஹக்கர உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் சென்றுள்ளது.

இருதரப்பு தடையில்லா வர்த்தக ஒப்பந்தம், இரு தரப்பு உறவுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் (12ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ். தமிழர்கள் மீதான கெடுபிடிகளுக்கு அனைத்துலக சட்டவாளர் ஆணையகம் கண்டனம்

அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் ...ள்ள தமிழ் மக்களின் வீடுகள் அவுஸ்திரேலியப ...னாய்வுத் துறையினரால் பாரிய தேடுலுக்கு ...ள் ளாகியதை அனைத்துலக சட்டவாளர் ...ணை யகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடந்த வாரம் மெல்பேர்ன் நகரில் உள்ள ...ழர்கள் வீடுகளில் பயங்கரவாத தடைச் ...டத்தின் கீழ் அவுஸ்திரேலியப் பொலிசாரும் புலனாய்வுத்துறையினரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கணினிகள், தொலைபேசிப் பதிவுகள் எடுக்கப்பட்டும் இதர கோவைகளும் அவர்களால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.இந்த நடவடிக்கையானது கடற்கோள் அனர்த்த பணிகளுக்கு நிதியுதவி செய்யும் கொடையாளிகளை அச்சுறுத்தும் செயல் என அனைத்துலக சட்டவாளர் ஆணையகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

## அரசின் வன்முறைகளுக்கு எதிராக மாணவர்கள் நேற்றும் போராட்டம்!

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர். வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்ட மாணவர்கள் தமிழ் மாணவர்களுக்கு எதிரான அராசங்கத்தின் வன்முறை என்று எழுதப்பட்ட சவப்பெட்டி ஒன்றையும் தீயிட்டு எரித்தனர். இதேவேளை, யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் தமது பரீட்சைகளைப் பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டமை தெரிந்ததே. (32)

## ...ந்திய உயர் இராணுவ அதிகாரி நேற்று சிறிலங்கா வருகை



இந்தியதென்பிராந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பி.எஸ் தக்கார் நேற்று சிறிலங்கா வருகை தந்தார்.

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டேகொடவுடன் அவர் ஆலோசனை நடத்தியதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரனகே தெரிவித்துள்ள்ார்.

இருப்பினும் இச் சந்திப்பின் (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழ் மக்கள் மீதான இராணுவ அட்டூழியங்களை நிறுத்துக!

### - மகிந்தவிற்கு தமிழ் மக்கள் பேரவை மனு

திருகோணமலையில் தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தின் அட்டூழிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் அனுப்பியுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, திருகோணமலை நகரில் சட்டவிரோதமாக கடந்த மே மாதம் 15ஆம் திகதி நிறுவப்பட்ட புத்தர் சிலை விவகாரத்தின் பின் சிறிலங்கா அரசாங்க தரப்பினர் எங்களுடன் நடாத்திய பல கட்டப் பேச்சுவார்த்தையின்போது அமைச்சர்கள் மூவர் நேரடியாக எமக்குப் பல வாக்குறுதிகளை வழங்கினர்.

சட்ட ரீதியான முறைகளைக் கையாண்டுபுத்தர்சிலையை அகற்றுவதாகக் கூறினார்கள்.

ஆனால், சொல்லப்பட்டவை எவையுமே நிறைவேற்றப்படாமல் காலங்கள் இழுத்தடிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு இராணுவ (12ஆம் பக்கம் பார்க்க)

## ...மகிந்தவின் சிந்தனைகளால் ...துண்டு விழும் தொகை உயர்வு

மகிந்த சிந்தனை எனப்படும் மகிந்தவின் நோக்கை செயற்படுத்துவதற்கு ...திர்வரும் எட்டாம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கு வரவு செலவு திட்டத்தில் ...ருந்து 10.95 பில்லியன் ரூபா மேலதிகமாக தேவைப்படும் என தெரிவிக்கப் ...ட்டுள்ளது.பசளை மானியம்,சமுர்த்தி கொடுப்பனவின் அதிகரிப்பு மற்றும் ...மாணவர்களுக்கான பகல்உணவு ஆகியவற்றுக்காகவே இந்த மேலதிக நிதி ஒதுக்கீடு தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பொது இடங்களில் புகை பிடித்தலை தவிர்க்க த.சு. சேவை வேண்டுகோள்

(அலுவலகசெய்தியாளர்)

மக்கள் கூடும் இடங்களில் புகைபிடிப்பதனை தவிர்த்துக்கொள்ளும் வண்ணம் தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புகைபிடிப்பதால் புகைப்பிடிப்பவர்கட்கு மட்டும் உடல்பாதிப்பு ஏற்படுவதில்லை. இப்புகையினை உட்சுவாசிக்கும் சகல மக்களும் உடல், உள பாதிப்புக்கு உள்ளாகின்றனரெனவும் இதனைத் தவிர்க்கும் வகையில் பேருந்துக்கள்,பொதுச் சந்தைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் புகைபிடிப்பதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது.

25-11-2005 அன்று முகமாலை சோதனைச் சாவடியில் 777394215v இலக்கமுடைய தே.அ.அட்டை தொலைந்துவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கிளி. ஈழநாதம் பணிமனை யிலோ,ஆஸ்பத்திரி வீதி பன்றிசுட்டான் கண்டாவளை என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல். ம.குகநேசன் (7062)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

இலங்கை கணணிகள் சங்கத்தினால்
நடாத்தப்படும் பரீட்சை

Srilankan Computer Driving Liecence

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**
**தொடர்புகட்கு:**
**வின்நெற் கணனி பயிற்சி நிலையம்**
**டிப்போ வீதி, கிளிநொச்சி (சி.13074)**

## சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

இயந்திரத்தில் செய்த சீமெந்துக்கல் சிவா பொறியியற் தொழிலகம் 4ஆம் கட்டை அம்பாள் புரம் வன்னிவிளாங்குளத்தில் (மாங்குளம்) விற்பனைக்குண்டு.
அளவுகளும் விலையும்
5"x6" x12"=ரூ25.00, 4"x6" x14"=ரூ23.00
(6841)

## ஆங்கில வகுப்பு ஆரம்பம்

சிறுவர்களுக்கான ஆங்கிலப் பேச்சு வகுப்பு ஆரம்பம். காலம் 07-12-2005 புதன்கிழமை நேரம் காலை 7.00 மணி. ஆசிரியர் இ.றஜீத். இடம் அரச வைத்தியசாலை அருகாமை, முல்லைவீதி, புதுக்குடியிருப்பு.(6952)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினால்**
**யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கோதுமை மா கேள்வி கோரல்**

**சனவரி, பெப்ரவரி, மார்ச் -2006**

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்குக் கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக்தொன் கோதுமை மா வீநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மாவை பின்வரும் அடிப்படையில் வீநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| வீநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2006 சனவரி | 400 Mt |
| 2006 பெப்ரவரி | 400 Mt |
| 2006 மார்ச் | 400 Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.12.02 ஆம் திகதி தொடக்கம் 2005.12.20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக (விலைகேள் முறி– Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆணவத்திலுள்ளது.

3. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2005.12.21 ஆம் திகதி பி.ப2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும், அன்றைய தினம் பி.ப 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4. நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக) – PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-13477)

# சாவு அறிவித்தல்

## திரு. ச. முத்தையா

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் திரு. ச. முத்தையா அவர்கள் 26.11.2005 அன்று கனடாவில் காலமானார் என்பதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:- **பிள்ளைகள்**
**மு.உதயசங்கர்,**
**மு. குலசங்கர்**

(7065)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சினால்**
**யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்**
**சிவப்பு நாட்டரிசி**
**வழங்கலுக்கான கேள்வி கோரல்**

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2006 சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ளஅளவுகளில் நேரடியாக விநியோ கிப்பதற்கான கேள்விகள்.மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட் டங்களில் பதிவு செய்யப்பட் டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின் றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப் பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2006 சனவரி (MT) | 2006 பெப்ரவரி (MT) | 2006 மார்ச் (MT) |
| 1 | சாவகச்சேரி | 75 | 75 | 75 |
| 2 | கைதடி | 30 | 30 | 30 |
| 3 | கொடிகாமம் | 50 | 50 | 50 |
| 4 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 5 | கட்டைவேலி நெல்லியடி | 15 | 15 | 15 |
| 6 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 7 | புலோலி | 15 | 15 | 15 |
| 8 | மருதங்கேணி | 15 | 15 | 15 |
| 9 | யாழ்ப்பாணம் | 70 | 70 | 70 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 30 | 30 | 30 |
| 12 | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13 | மானிப்பாய் | 20 | 20 | 20 |
| 14 | பண்டத்தரிப்பு | 20 | 20 | 20 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பளை | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 50 | 50 | 50 |
| 18 | சுன்னாகம் | 40 | 40 | 40 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 20 | 20 | 20 |
| 20 | வேலணை | 25 | 25 | 25 |
| 21 | ஊர்காவற்றுறை | 25 | 25 | 25 |
| 22 | காரைநகர் | 20 | 20 | 20 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 10 | 10 | 10 |
| | மொத்தம் | 750 | 750 | 750 |

2. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.
3. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.12.02 ஆம் திகதி தொடக்கம் 2005.12.20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
4. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்வி கோரப்பட்டுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
6. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.12.21 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
7. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.
8. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர் களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Perfornance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோ கத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது.மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடை யதாக இருக்கும்.

க.கணேஷ்
தலைவர் / அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை / மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-13478)

## அல் ஜசீரா மீது தாக்குதல் திட்டம்

(லண்டன்)

அரபி மொழி தொலைக் காட்சியான அல் ஜசீரா மீது குண்டு வீசித் தாக்கி அழிக்க புஷ்சும், ரோனி பிளேரும் திட்டமிட்டிருப் பதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதை அமெரிக்க சனாதி பதியின் வெள்ளை மாளிகை மறுத்துவிட்டது. றொனி பிளேயர் அலுவலகம் இது பற்றி மறுப்பு எதுவும் இதுவரை வெளியிடாமல் இருந்தது.

பாராளுமன்றத்தில் இது தொடர்பாக எழுத்து மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு அந்த மாதிரி எந்தத் திட்டமும் இல்லை இது தொடர்பாக அமெரிக்கா எந்தத் தகவலையும் அனுப்பவில்லை என்று ரோனி பிளேயர் எழுத்து மூலம் மறுப்பு தெரிவித்தார்.

# சதாமுக்கு நீதிவழங்கப்படவில்லை என்கிறார் அமெரிக்க முன்னாள் வழக்கறிஞர்

(அம்மான்)

**ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனிற்கு உரிய நீதிவழங்கப்பட வில்லையென அமெரிக்காவின் முன்னாள் வழக் கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

ஜோர்தானில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு கூறினர்.

ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனிற்கு உரியநீதி வழங்கப் படமையால் அவர் தொடர்பான வழக்குவிசாரணைகள் சர்வதேச நீதி மன்றத்தில் முன்னால் விசாரிக்கப்பட வேண்டு மென்றும் அமெரிக்க முன்னாள் வழக்கறிஞர் குறிப் பிட்டுள்ளார்.

இவருடன் இருவெளிநாட்டு வழக்கறிஞரான கட்டார் நாட்டின் முன்னாள் நீதியமைச்சரும் ஜோர்தானிய வழக்கறிஞர் ஒருவரும் இக்கருத் தினையே தெரிவித்துள்ளனர்.

சதாம்ஹுசைன் மீதான விசார ணை உரிய முறையில் நடைபெ றாதது. மட்டுமன்றி அவர்தனது உறவினர்கள் நண்பர்களைப் பார்ப் பதற்கான அனுமதி மறுக்கப் பட்டிருப்பதாக இவர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்தநிலையில் ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படையினர் அவரை நரகத் தில் தள்ளியிருப்பதாகவும் அமெரிக்க முன்னாள் வழக்கறிஞர் கூறியுள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள சதாம் மீதான வழக்கு விசாரணைகள் எத்தகைய முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தப் போவதில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.



கலிபோர்னியா மாகாணம், சாக்ரமென் டோவில் உள்ள கத்தோலிக்க ஆலயத்தில் உள்ள மேரிமாதாவின் சிலையின் இடது கண்ணில் இரத்தம் வடிவது போல் காட் சியளிக்கிறது சில வாரங் களுக்கு முன்பு இதே போல் சம்பவம் இங்கு நடந்தது மீண்டும் நிகழ்வது ஆச்சரியம் அளிப்பதாக ஆலய அதிகாரி கூறினார்.



ஈராக்கிய தீவிரவாதிகளால் ஜேர்மனியைச் சேர்ந்த தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவர் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# ரூபா 2600 கோடி வசூலை குவித்த ஹாரிபொட்டர் படம்

(லண்டன்)

'ஹாரிபொட்டர்' திரைப்படம் இரண்டு வாரத்தில் ரூபா 2600 கோடி வசூலை குவித்து சாதனை படைத்துள்ளது.


இங்கிலாந்து பெண் எழுத்தாளர் ஜே.கே.ரவுலிங் எழுதிய ஹாரிபொட்டா நாவல்கள் திரைப்படமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுவரை மூன்று ஹாரிபொட்டர் திரைப்படங்கள் வெளியாகிவிட்டன.

இப்போது 'ஹாரிபொட்டர் ஆன் தி குளோப் லெட் ஆப் பைர்' என்ற நான்காவது படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது சிறுவர்களை கவர்ந்துள்ள இந்தப் படம் உலகின் பல்வேறு நாடுகளிலும் திரையிடப் பட்டுள்ளது.

இந்தியா உட்பட பல்வேறு நாடு களில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் திரையிடப்பட்ட இந்தப் படம் இதுவரை ரூபா 2600கோடி வசூலை எட்டி சாதனை படைத்துள்ளது.

இதில் வட அமெரிக்க நாடுகளில் இருந்து மட்டும் பாதி தொகை வசூல் ஆகியிருப்பதை திரைப்பட நிறுவனம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் மட்டும் ரூபா 400 கோடி வசூலாகி இருக்கிறது டுனியாவில் ரூபா 270 கோடியும், மெக்சிகோவில் ரூபா 140 கோடியும் வசூலாகியுள்ளது.



பிலிப்பைன்சில் நடைபெற்ற மலேசிய மற்றும் பிலிப்பைன்ஸ் அணிகளுக்கிடையேயான கால்பந்துப் போட்டியைக் காணவந்த அந்நாட்டு அதிபர் அரோயா

# கடத்தப்பட்டவர்கள் தொடர்பான ஒலி நாடாவை வெளியிட்டது அல்ஜீரா தொலைக்காட்சி

ஈராக்கில் இனந்தெரியாதவர் களினால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு வெளி நாட்டவர்கள் தொடர்பான காட்சி களைஅல்ஜசீரா தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஈராக்கில் கடத்தப் பட்ட தமது நாட்டவர்களை மீட்பதற் கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கனேடியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நான்கு வெளிநாட்டு உதவி யாளர்களும் இனந்தெரியாத குழுவினால் தடுத்து வைக்கப் பட்டுள்ள காட்சிகளைஅல்ஜசீரா தொலைக்காட்சி நேற்றுமுன்தினம் வெளியிட்டது.' இதில் தம்மால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஈராக்கிலுள்ள கூட்டுப்படைகளின் உளவாளிகள் என இந்தக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவர்களது உயி ருக்கு அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது போன்ற தகவல்கள் எதுவும் ஒளிநாடாவில் உள்ளடக்கப் பட்டிருந்ததா என்பது குறித்த தகவல் எதனையும் அல்ஜசீரா வெளியிட வில்லை.

அதேவேளை ஈராக் மக்க ளுக்கு உதவுவதற்காகச் சென்ற தமது நாட்டவர்கள் கடத்தப்பட்டுள் ளமை குறித்து கவலை தெரிவித் துள்ள கனேடியப்பிரதமர், தமது நாட்டவரை மீட்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் தாம் ஈடுபட்டுள்ள தாகக்கூறியுள்ளார்.

# மூன்றாம் முறையாக சவப்பெட்டி வாங்கிய பாட்டி

ருமேனியாவைச் சேர்ந்தவர் மரி யானா ஸ்டான் கெஸ்கு 72 வயதான இவர் இறந்தபிறகு தன்னை புதைப் பதற்காக ஏற்னவே இரண்டு சவப் பெட்டிகளை வாங்கிவைத்து இரண்டும் கெட்டுப்போய்விட்டன. இதனால் அவர் இப்போது மூன்றவாது சவப்பெட்டி யை வாங்கி இருக்கிறார்.

இதுபற்றி அவர் கூறுகையில் " எனக்கு குடும்பம் கிடையாது. நான் தனியாக வசித்து வருகின்றேன். மரணம் வரும்போது என் இறுதிச் சடங்குக்குத் தேவையான அனைத்தை யும் தயாராக வைத்திருக்க விரும்பு கின்றேன் அதற்காக பத்து ஆண்டு களுக்கு முன்பே நான் சவப்பெட்டியை வாங்கிவைத்து விட்டேன்.

சிறிதுகாலத்தில் அது வெயில்பட்டு வெடித்துப் போய் விட்டது. அதன்பிறகு இரண்டவதாக ஒரு சவப்பெட்டி வாங்கினேன். அதைத் தோட்டத்தில் போட்டு வைத்திருந்ததால் அது மழையில் நனைந்து கெட்டுப்போய்விட்டது. அதனால் மூன்றவதாக ஒரு சவப் பெட்டியை வாங்கி இருக்கின் றேன்" என்று குறிப்பிட்டார்.

இந்தமுறை சவப்பெட்டியை கெட்டுப்போக விடமாட்டேன் எனத் தெரிவித்தார் அந்தப் பாட்டி

# கணினி கோளாறுகளை சரி செய்ய ஸ்டிக்கர் பொட்டு வடிவில் புதிய ரோபோ

(நியூயோர்க்)

அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சிறு ஸ்டிக்கர் பொட்டு வடிவிலான புதிய ரோபோக்களை உருவாக்கியுள்ளனர் விரல் நுனியில் 100 இற்கும் மேற்பட்ட இது போன்ற ரோபோக்களை கையாள முடியும்.

இந்த வகை ரோபோக்கள் கணினிகளில் ஏற்பட்டுள்ள கோளாறுகளைச் சரி செய்யும் கணினி 'சிப்'களில் சர்க்யூட்டுகளை சரி செய்யு

இந்த ரோபோக்களில் சக்கரமோ, மின்கலமோ கிடையாது. மெல்லிய சில்வர் சிலிக்கான்களால் ஆன இந்த ரோபோக்களில் இரண்டு மெமரி பாயிண்டுகள் உள்ளன. மின்சக்தியை உருவாக்கும் இரண்டு ஆக்சுலேட்டர்கள் உள்ளன.

விஞ்ஞான வளர்ச்சியின் ஒரு பகுதியாக விதவிதமான ரோபோக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இயந்திரமனிதன் என்று அழைக்கப்படும் இந்த ரோபோக்கள் மனிதன் செய்ய முடியாத வேலைகளை மிக எளிதாக செய்கின்றன. மனித வடிவில் மட்டுமின்றி பாம்பு வடிவிலும் நாய்வடிவிலும் சிறு பூச்சி வடிவிலும் கூட ரோபோக்கள் உருவாக்கப்படுகின்றன. இயந்திரங்களை பழுது பார்ப்பது, வீட்டு வேலைகளை கவனிப்பது, பாதுகாப்புப் பணிகளிலும் இவை ஈடுபடுத்தப்படுகின்றன.

# உலகின் கவனத்தை ஈர்த்துள்ள பன்டா இனக்கரடிக்குட்டி

வோஷிங்டன் தேசிய உயிரியல் பூங்காவில் வாழும் பாசியன் பன்டாக்கரடிக்குட்டி குறித்து கடந்த சிலதினங்களாக உலகின் பலரின் கவனங்கள் திரும்பியுள்ளது.

அண்மையில் இந்தக்கரடியை படம் பிடிப்பதற்கு ஊடகவியலாள்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

வோஷிங்டன் உயிரியல் பூங்காவில் வாழும் இந்தப்பன்டாவின் வயது நான்காகும். இந்த பன்டாவின் செயற்பாடுகளை தமது கமராக்கண்களுக்குள் உள்வாங்கிக்கொள்வதற்கென ஆயிரக்கணக்கான ஊடகவியலாளர்கள் வோஷிங்டன் உயிரியல் பூங்காவில் கூடினர். அண்மையில் இணையத்தளமூடாக கூறப்பட்ட பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் இந்தப்பன்டாவுக்கு பாசியன் எனப்பெயரிடப்பட்டது.

சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்தப்பெயர்த்தெரிவில் ஈடுபட்டனர்.

பாசியன் என்பது சமாதானத்தின் பெயர் எவ்வாறாயினும் இந்தப்பன்டாக்குட்டியை டிசம்பர் மாதம் எட்டாம் திகதியே பொதுமக்கள் பார்வையிடமுடியும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# மியான்மாருக்கு அமெரிக்கா கண்டனம்

மியான்மார் இராணுவ ஆட்சி அங்கு சனநாயக ஆட்சி கோரிப் போராடி வரும் சூகியின் வீட்டுக் காவலை மேலும் ஒரு ஆண்டுகாலம் நீடித்துள்ளது. இதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அமெரிக்க வெளிநாட்டு இலாகா அதிகாரி சீன் மெக்கார்மாக் கூறுகையில்; தவறான பாதையில் மியான்மார் இராணுவ ஆட்சியாளர்கள் நடைபோடுகிறார்கள் என்பதற்கு இது இன்னும் ஒரு உதாரணம் என்று கூறினார். அனைத்து அரசியல் கைதிகளையும் மியான்மார் விடுதலை செய்ய வேண்டும் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவசேவை

கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்குப்பிர தேசத்தில் ஆழியவளை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்க ளிலும், அக்கராயன் பிரதேசத்தில் மணியங்குளம், இரண்டாம் பாடசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களிலும், முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்கள் குடியிருப்புக்களில் தங்கியுள்ள மக்களுக்கான விசேட மருத்துவசேவை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் மேற் கொள்ளப்பட்டதுடன் நோய்த்தடுப்பு முறைகள் பற்றிய கருத்துக்களும் தொண்டர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் கட்டைக்காடு, அக்கராயன் பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தொடர் மருத்துவசேவை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# புதிய நிர்வாக குழுத் தெரிவு

கிளிநொச்சி மருத்துவர் சங்க புதிய நிர்வாக குழுத்தெரிவு கடந்த வாரம் இடம்பெற்றது. வைத்தியர் இ.சதானந் தன் தலைவராகவும், வைத்தியர் சி.ஜீவா செயலாளராகவும், வைத் தியர் மா.குகராசா பொருளாளராகவும், துணைத்தலைவர்களாக வைத்தியர் கா.சுஜந்தன்,வைத்தியர் சி.சிவதா சனும், துணைச்செயலாளராக வைத்தியர் அ.திலீபனும் மற்றும் ஆறு உறுப்பினர்களும் நிர்வாகக் குழு விற்கு தெரிவு செய்யப்பட்டனர்.(சோ)

# தேசியத்தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு கனகராயன் குள கிராம மக்களுக்கு தொலைக்காட்சி சாதனம்

தமிழீழ தேசியத்தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு வவுனியா மாவட்ட த.பொ.மே. நிறுவனத்தினரால் கனகராயன் குள வடக்கு கிராமத்தில் 26ஆம் திகதி அன்று அக் கிராம மக்களுக்கான தொலைக்காட்சி சாதனங்கள் வழங்கும் நிகழ்வு கனகராயன்குள வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு நடைபெற்றது. இதில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி டிஸ்அன்ரனா, மின் பிறப்பாக்கி ஆகியவை கனகராயன்குள கிராமவடக்கு கமக்கார அமைப்பு மாதர் சங்கம், கிராமிய அபிவிருத்திச்சங்கம் ஆகிய அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் கனகராயன்குளம், புளியங்குளம் நயினாமடு நெடுங்கேணி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த 600 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளும் பழமரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் கௌரவிப்பு

(புதுக்குடிருயிருப்பு)

இவ்வருடம் இடம் பெற்ற ஐந் தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சையில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பாடசாலை மாணவன் இ. ராம்கிசர்மா 156 புள்ளிகளைப் பெற்று மாவட் டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அவரையும் இப்பாடசாலையில் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய மாணவர்களையும் கௌர விக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் விக்கினேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பொதுச்சுடரை முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினமும் ஆனந்தபுரம் விஸ்ணு ஆலய பிரதம குருக்களும் ஏற்றிவைக்க,தேசியக்கொடியை புதுக்குடியிருப்பு பிரதேசப்பொறுப் பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் ஏற்றிவைத்தார்.

அடுத்து வரவேற்புரையை ஆசிரி யர் சிவராசா நிகழ்த்தினார்.

தொடர்ந்து பாடசாலையால் வழங் கும் தங்கப்பதக்கத்தை முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் ராம்கி சர்மாவுக்கு வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து நூறுபுள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கருத்துரையை புதுக்குடியிருப்பு பிரதேசப்பொறுப்பாளர்,முல்லை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப் பாளர் மற்றும் பலர் நிகழ்த்த சிறப்பு ரையை முல்லைவலயக் கல்விப்ப ணிப்பாளர் ஆற்றினார். (08)

## துவிச்சக்கரவண்டி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி ஒலுமடுவில் வூக்ஸ் நிறுவனத்தின் நிதியுதவி யுடன் ரீடோ நிறுவனம் நடைமுறைப் படுத்தி வரும் தொழிற்பயிற்சி நிலை யத்தில் கட்டட தொழில் (மேசன்) பயிற்சி மேற்கொண்டுவரும் மாண வர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

மேற்படி பயிற்சியினை பெற்று வரும் 23 மாணவர்களுக்கு ஒலுமடு தொழிற்பயிற்சி நிலையத்தில் வைத்து நேற்றைய தினம் ரீடோ நிறுவன் திட்ட இணைப் பாளர் செ.கனேந்திரன் தலைமையில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆங்கில மொழிக்கல்லூரியின் ஆங்கில தினக்கொண்டாட்டம்

*(அலுவலக செய்தியாளர்)*

***தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் மாணவர் அமைப்பால் நடத்தப்படும் ஆங்கிலக்கல்லூரி மாணவருக்கிடையேயான ஆங்கில தினக்கொண்டாட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.***

பிற்பகல் 4.00 மணிக்கு கிளி.பாண்பாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப் பொறுப் பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். ஆங்கில மொழிக் கல்லூரிக் கொடியை கல்லூரி நிர்வாக உத்தியோகத்தர் செல்வி.என்.நளாயினி ஏற்றினார். மங்கல விளக்கை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகன தாஸ்,தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.



துணைவேந்தர் மோகனதாஸ் மங்கல விளக்கேற்றுகிறார்

இவற்றைத்தொடர்ந்து வரவேற்புரையை செல்வி நளாயினி நிகழ்த்தினார். தொடர்ந்து. கல்லூரி மாணவர்க ளிடையேயான ஆங்கிலப்போட்டிகள் இடம்பெற்றன. போட்டிகள் நிறைவடைந்ததும் வெற்றியீட்டிய மாணவர் களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் உட்பட்டவர் கள் வழங்கினர்.

கிளிநொச்சியில் இயங்கிவரும் ஆங்கில மொழிக் கல்லூரியில் இருபத்து மூன்று மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. -(லோ.கு)

# பிரதானவீதிகளில் மஞ்சள் நிறக் கோடுகள் அழிந்துள்ளதால் போக்குவரத்து செய்வதில் பாதசாரிகள் சிரமம்

(அலுவலக செய்தியாளர்)

பிரதானவீதிகளின் பிரதான கடவை களில் பூசப்பட்டிருந்த மஞ்சள் நிறக் கோடுகள் அழிவுற்றுக்காணப்படு கின்றமையின் காரணமாக அப்பகுதி யூடாக வீதியினைக் கடக்க முயலும் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்வதனைக் காணக்கூடிய தாகவுள்ளது. மேற்படி பிரதான வீதி யின் முக்கிய இடங்களில் பூசப் பட்டிருந்த மஞ்சள் நிறதீந்தைகள் அழிவுற்று துலக்கமின்மையாக உள்ள தனால் அவ்விடங்களில் வாகனங்கள் வேகமாகச் செல்வதன் காரணமாக மக்கள் அப் பகுதியூடாக வீதியினைக் கடக்க முடியாது திண்டாடுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதன்காரணமாக இப்பகுதிகளில் வீதிவிபத்து ஏற்படக்கூடிய ஏது நிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே சம்பந்தப்பட்டதிணைக்களத் தின் உடன்நடவடிக்கை மேற் கொண்டு மேற்படி பகுதிகளில் மஞ்சள் நிற தீந்தைகளைப் பூசி அப்பகுதிகளில் மக்கள் எதிர்கொண்டு வரும் அசௌ கரியங்களைப் போக்கமுன்வரவேண்டு மென சகலதரப்பினரும் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

# மாற்றீடானவலுவுள்ளோர் தினம் எதிர்வரும் 22ஆம் திகதி

(அலுவலக செய்தியாளர்)

மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச்சங்கத்தால் மார்கழி மாதம்மூன்றாம் திகதி சர்வதேச மாற்றீடான வலுவுள்ளோர் தினத்தையும், 15ஆவது ஆண்டு விழாவையும் எதிர்வரும் சனிக்கிழமை கொண்டாட ஏற்பாடாகி இருந்தது.

காலநிலை காரணமாகவும், போக்குவரத்து சீரின்மை காரணமாகவும், அங்கத்தவர்களின் நலன் கருதி மேற்படி நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி வழமையான இடத்தில் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச்சங்க இணைப்பாளர் அன்ரன் தெரிவித்துள்ளார். (கு)

# செயலமர்வு

(பூநகரி)

பூநகரிக் கல்விக்கோட்ட பாட சாலைகளுக்கான சுகாதார மேம் பாட்டுச் செயலமர்வு யுனிசெப் நிறு வன அனுசரணையுடன் சுகாதார மேம் பாட்டு இணைப்பாளரால் நாளை காலை 8.30-4.30 வரை முழங்காவில் ம.வியில் இடம்பெறவுள்ளது. இச் செயலமர்வுக்குபாடசாலையில் தலா ஒரு ஆண் ஆசிரியரும் ஒருபெண் ஆசிரியரும் அதிபருமாக மூவர் கலந்து கொள்ளுமாறு பூநகரிக்கோட் டக்கல்வி பணிப்பாளர் தி.கணபதிப் பிள்ளை கேட்டுள்ளார். (34)

# கிளி.மகா வித்தியாலய மாணவர்களுக்கு கிளிநொச்சிமருத்துவ சங்கம் பாராட்டு

(அலுவலக செய்தியாளர்)

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான திறந்த நாடகப்போட்டியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களுக்கு கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் பாராட்டினைத் தெரிவித்துள்ளனர். சகல வசதிகளும் வாய்ப்புக்களுடன் கூடிய நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுடன் போட்டியிட்டு கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து தோற்றி கிளி/ மகாவித்தியாலயம் நாடகப்போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பொலிஸ் சோதனைச் சாவடி மீது அதிகாலை வேளை தாக்குதல்

கல்முனை பாண்டிருப்பு சிறிலங்கா பொலிஸ் சோதனைச் சாவடி மீது நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அதிகாலை 2.20 மணியளவில் இனந்தெரியாதோரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர் என்று கல்முனை பொலிஸ் தலை மையகப் பொறுப்பதிகாரி டபிள்யூ.சி. விஜேயதிலக்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் போது பொலிஸ் சோதனைச் சாவடியில் இருந்த பொலிசாரும் திருப்பிச் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் இடம்பெறும் போது சோதனைச் சாவடியில் உபபொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 23 பேர் கடமையில் இருந்துள்ளனர்.

# கண் "கற்றாக்" சத்திரசிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண் "கற்றாக்" சத்திரசிகிச்சை அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கண்ணில் பூவளர்ந்து பார்வை மங்கியவர்கள் நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவிலும் ஏழாம் திகதி புதன்கிழமை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையின் வெளிநோயாளர் பிரிவிலும் தொடர்பு கொள்ளுமாறு பொன்னம்பலம் மருத்துவமனை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

( லோ.கு)

# கண்டெடுத்த பொருட்கள் நீதிமன்றில்; உரியவர் பெற்றுக்கொள்க

நாச்சிக்குடா காவல் பணிமனையி னரால் கண்டெடுக்கப்பட்ட கீழ் குறிப் பிடப்படும் பொருட்கள் ஜெயபுரம் மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தப் பட்டுள்ளது. எனவே உரியவர்கள் ஆதாரங்களைக்காட்டி 01.01.2006 இற்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு உரியமன்றினால் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

தொலைக்காட்சிப்பெட்டி, பொக்ஸ், டெக், அம்புசெற், மின்பிறப்பாக்கி, றோல்பிளக், துவிச்சக்கரவண்டி பார், மற்றும் சில உதிரிப்பாகங்கள், கைக் கடிகாரம் என்பனவாகும்.



**கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாக முதலாம் ஆண்டு மாணவர்கள் பாட சாலை வளாகத்தில் அமைந்துள்ள தற்காலிகக் குடில்களில் இருந்தே கல்வி கற்று வருகின்றனர். மேற்படி மாணவர் கல்வி கற்கும் குடிலினைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)**

# விவசாயச் செய்கைக்கு அனுமதி வழங்கிவிட்டு தொழிலில் ஈடுபட படையினர் மீண்டும் கெடுபிடி

[யாழ்ப்பாணம்]

**யாழ்.அரியாலை கிழக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அடையாள அட்டைகளை வழங்கியுள்ள போதும் அங்கு உள்ள விளைநிலங்களுக்குச் சென்று பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

அரியாலை கிழக்கில் உள்ளஒரு தொகுதி விளைநிலங்கள் இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து ஒரு பகுதியை விடுவித்த இராணுவத்தினர் அங்கு விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்றும் அனுமதி வழங்கி அதற்கான அடையாள அட்டைகளையும் விவசாயிகளுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கியிருந்தனர்.

இராணுவத்தினரின் இவ் உறுதிமொழிகளை நம்பி அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவரும் நிலையில் மேற்படி விளைநிலத்தில் விவசாயிகள் எவரும் பிரவேசிக்க முடியாது என்று படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

இதனால் இவ் விளைநிலத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற எதிர்பார்ப்புடன் படையினரது வாக்குறுதிகளை நம்பியிருந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

படையினர் செய்த இவ் ஏமாற்று நடவடிக்கைகளால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப விபரம் யாழில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மழை வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகிறது என்று அதன் யாழ். மாவட்டப்பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக 31கிராம சேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்ட காலத்திட்ட அடிப்படையிலான புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்கு ஏதுவாகவே இவ்விபரசேகரிப்புகள் இடம் பெற்று வருகின்றன.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களது விபரங்கள் யாவும் கிராம சேவகர் பிரிவுகள் வாரியாக சேகரிக்கப்பட்டு வருகிறது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் ஏற்கனவே உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (33)

# விவசாய மானியத்தின் கீழ் தூவல் நீர்ப்பாசன உபகரணம்

ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தித்திட்டத்தின் விவசாய மானியத்தின் கீழ் யாழ்.குடாநாட்டு விவசாயிகளுக்கு 178 தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டின் நிலத்தடிநீர்வளம் அருகிவருவதாக சுற்றுச்சூழல் துறையினர் எச்சரித்துள்ள நிலையில், குடாநாட்டு விவசாயிகள் நீர்விரயம் அதிகம் ஏற்படக்கூடிய சாதாரணமான மற்றும் நேரடியான நீர்ப்பாசன முறைகளையே பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகக் கையாண்டு வருகின்றனர்.

இதனால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புக்களைத் தவிர்க்கும் முகமாக குடாநாட்டு விவசாயிகளிடையே தூவல் நீர்ப்பாசன முறையை யாழ்.மாவட்ட கமநலசேவைகள் நிலையம் அறிமுகப்படுத்தியது. இந்த தூவல் நீர்ப்பாசன முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக நீர்விரயமற்ற இலாபகரமான முறையால் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளக்கூடிய நிலை உருவானது.

இதன் காரணமாக விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு இணங்க முதற்கட்டமாக 84 தூவல் நீர்ப்பாசன உபகரணங்களையும் இரண்டாம் கட்டமாக 94 தூவல் நீர்ப்பாசன உபகரணங்களையும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்டப்பிரிவின் விவசாயமானியத்திட்டத்தினர் வழங்கியுள்ளனர். (33)

# குடாநாட்டில் நெற்செய்கையாளருக்கு தொழில் இயந்திரங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு நெற்செய்கையாளர்களது தொழில் தரத்தை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தினரால் நெல் அறுவடை மற்றும் சூடடிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டு நெற்செய்கையாளர்கள் கடந்தகால யுத்த அனர்த்தம் மற்றும் இடப்பெயர்வுகளினால் தொழில்ரீதியாக பல பாதிப்புக்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் குடாநாட்டு விவசாயிகளின் தொழில்தரத்தை மேம்படுத்த வேண்டிய அவசியப்பாட்டை உணர்ந்தே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நெல் அறுவடை மற்றும் சூடடிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் முதற்கட்டமாக யாழ்.குடாநாட்டுக்கு 13 இயந்திரங்களை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டப்பிரிவினர் வழங்கியுள்ளனர். இவை ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்றும், இவற்றை யாழ். மாவட்டத்தில் இயங்கும் விவசாய சம்மேளனங்களூடாக சேவையில் ஈடுபடுத்தத்திட்டமிட்டுள்ளது என்றும் யாழ்.மாவட்ட கமநலசேவைகள் உதவிப் பணிப்பாளர் சுந்தரேசன் தெரிவித்தார். (33)

# சனிக்கிழமை சர்வதேச வலுவிழந்தோர் தினம்; வன்னி பெருநிலப்பரப்பிலும் கடைப்பிடிப்பு

(நமது நிருபர்)

சர்வதேச வலுவிழந்தோர் தினம் எதிர்வரும் சனிக்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

வெண்புறா செயற்கை உறுப்பு தொழி நுட்ப நிறுவனம் கண்ணிவெடி விழிப் புணர்வுத்தொடர்பகங்கள் மூலமாக வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் அனுஷ்டிக்கப்படுவதுடன் இனம் காணப்பட்ட பயனாளிகளுக்கு உணவல்லாத வீட்டுப்பாவனைப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பளை,பூநகரி, புதுக்குடியிருப்பு, மாங்குளம், பனங்காமம், நெடுங்கேணி,கனகராயன்குளம் ஆண்டாங்குளம்,பாலம்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தொடர்பகங்களில் காலை 10.00மணிக்கு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

# வீதிக்கிடங்கில் வீழ்ந்த இளைஞன் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பன்னங்கண்டி வீதியில் வெள்ளத்தால் அரிக்கப்பட்ட பாரிய கிடங்கில் வீழ்ந்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இவர் தற்போது கிளிநொச்சி மருத்துவமனை அவசரசிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரவு வேளை இவ்வீதியால் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. கோபாலப்பிள்ளை சந்திரதாஸ் (வயது-19) என்பவரே அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டவராவார்.(12)


# உந்துருளிகள் விபத்து இரு மாணவிகள் காயம்

(வட்டக்கச்சி )

டக்கச்சி கட்சன் வீதிப்பகுதியில் இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரு பாடசாலை மாணவிகள் காயமடைந்துள்ளனர். உந்துருளிகள் பலத்த சேதமடைந்துள்ளன. இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.15 மணிக்கு இடம் பெற்றது.வட்டக்கச்சி ஆறுமுகம் வீதிப்பகுதியில் இருந்து வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு மாணவிகளை ஏற்றி வந்த உந்துருளியும், கட்சன்வீதிப்பகுதியில் இருந்து சந்தையடி நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளியும் நேருக்கு நேர்மோதிக்கொண்டதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. (12)



**பல்லவராயன்கட்டு வீதி அண்மையில் பெய்த மழை காரணமாக பாரிய சேதமடைந்துள்ளது. இதனால் வாகனங்கள் எதுவும் போக்குவரத்தில் ஈடுபட முடியவில்லை. பொதுமக்கள் பெரும் நெருக்கடி மத்தியில் பயணம் செய்வதைப் படங்களில் காணலாம். (படம்-ரூபன்)**



**அண்மையில் பெய்த மழைகாரணமாக இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்த பன்னங்கண்டி, மருதநகர் பகுதி மக்கள் வட்டக்கச்சியில் உள்ள சிவிச்சென்றர் பொது மண்டபத்தில் சுமார் நாற்பது பேர் வரையில் தங்கியுள்ளனர். [படம்-ரூபன்]**

# வழிகாட்டல் கருத்தரங்கு

(அலுவலகசெய்தியாளர்)

கல்வி நிர்வாக சேவை/ அதிபர் சேவை / அதிபர் சேவையின் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ஆகியவற்றுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன.


சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்களும் முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை இடம் பெறவுள்ளன.

மு/புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம், மு/யோகபுரம் ம.வி.ஆகிய இடங்களில் இந்த வழிகாட்டல் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன.

இதற்கான வளவாளர்கள் கொழும்பு மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் இருந்து இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சரவணபவானந்தனால் அழைத்துவரப்படவுள்ளனர். கடந்த கால விண்ணப்பப்பத்திரங்கள், பயிற்சிகள், ஆணைக்குழு அறிக்கை கள் சிறுகட்டணத்துடன் வழங்கப்படும். பரீட்சைகளுக்குத்தோற்றும் அனை வரும் பங்குபற்றிப்பயன்பெறுமாறு தமிழர்ஆசிரியர்சங்க துணைத் தலைவர் சோ.தியாகராசா கேட்டுள்ளார். (தீ.கு)

# மகிந்த சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்வாரா?

# வேறுமார்க்கமாக பிரச்சினையைத் தீர்க்க முற்படுவாரா



லங்காதீப சிங்கள நாளிதழ்
சரத்பர்ணாந்து
மொழியாக்கம்:- அ. சக்திவேல்

முடிவடைந்த சனாதிபதித் தேர்தலில் மகிந்தவின் சிந்தனை என்ற திட்டத்தை நாட்டு மக்களுக்கு முன்வைத்து ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்துள்ளார்: மேலும் தனது சனாதிபதி ஆட்சியை நடத்துவதற்கு பிரதம மந்திரி ஒருவரையும் அமைச்சர்கள் குழுவையும் தேர்ந்தெடுத்துள்ளார் இந்நிலையில் நாட்டின் எதிர்கால அரசியலை நடத்துவதற்கு அவர் முகம்கொடுக்கப் போகும் சவால்கள் என்ன என்பதை நாம் ஆராய்வோம்.

1997 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்கள் திறந்த பொருளாதார கொள்கையை அமுல்படுத்தியிருந்தன. அத்தோடு இவருக்கு முன் நாட்டில் ஆட்சிபுரிந்த நான்கு சனாதிபதிகளும் முகம் கொடுத்துள்ள சவால்களையே தற்போதைய சனாதிபதியும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. 28 வருடகால திறந்த பொருளாதார கொள்கையை நடைமுறைப்படுத்தி அதில் தோல்வியை தழுவிக்கொண்டுள்ளனர் ஆயினும் புதிய சனாதிபதி அவர்கள் தேசிய பொருளாதாரத்தில் புதிய நடைமுறைகளை அமுல்படுத்துவதில் அவர் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியே வரும்.

இதுவரை இலங்கை நாடு அமுல்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் நாம் பெரும் சிக்கலான பிரச்சினைகளை எதிர்நோக்கினோம் நாட்டின் வறுமை தொழில் இன்மை உணவு பிரச்சினைகள், கல்வி பிணக்குகள், வீடற்றோர்களின் பிரச்சினைகள், சுகாதார பிரச்சினைகள் இந்த நாட்டில் தலைதுாக்கின. இதனால் நாட்டின் அரச இயந்திரம் செயலற்று தனியார் துறையினரின் ஆதிக்கம் இந்நாட்டில் தலைதூக்கியது. அதே நேரத்தில் அரச உடமைகள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் சில அரச நிறுவனங்களை தனியார்துறையினர் கையேற்று நடத்தினார்கள்: இவைகள் எல்லாவற்றையும் பரிசீலனை செய்த பின்னரே மகிந்த ராஜபக்ஷ சிந்தனையை வெளியிட்டாரா என்பது சரிவர தெரியாது. எது எப்படியானாலும் மகிந்தவின் சிந்தனையின்படி ஆட்சியை நடைமுறைப்படுத்துவது மிக அவசியம் இதுவரைக்கும் நாங்கள் வெளிநாட்டவர்களுக்கு கடனாளியாகவே இருக்கிறோம். இதுவரை ஆட்சி செய்த தலைவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை வெளிநாட்டவர்களுக்கு அடகு வைத்து அவர்களினால் நமது நாட்டுக்கு வழங்கிய பொருளாதாரத்தை வைத்து ஆட்சி நடத்தினார்கள்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் வழங்கும் நிதி உதவிகளைப் பெற்று அவற்றிற்கு அடிமையாகாமல் நாட்டை சிறந்த அபிவிருத்தியாக் குவதற்கு புதிய சனாதிபதி அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இது சுலபமான காரியமல்ல இலங்கையை அந்நிய நாட்டவருக்கு அடிமையாக்காமல் மகிந்த தனது சிந்தனையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதுவரை நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் தேர்தல் காலங்களில் ஒன்றும் தேர்தல் முடிந்தபின் மற்றொன்றும் கூறி மக்களை ஏமாற்றி உலக வங்கியின் திட்டத்தின்படியே இந்த நாட்டை வழி நடத்தி வந்துள்ளனர். சந்திரிகாவின் பதினொருவருட ஆட்சியும் ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டு வருட ஆட்சிக்காலமும் புதிய சனாதிபதிக்கு நல்லதொரு படிப்பினையைக் கற்றுத் தந்துள்ளது. பழைய அரச நிர்வாகிகளுடன் புதிய சனாதிபதி அவர்கள் தமது கடமைகளைச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்.

இதுவரை காலமும் இந்த பழமை வாய்ந்த அதிகாரிகளும் ஆலோசகர்களும் நாட்டின் ஆட்சியைப் பிழையான வழியில் செலுத்தினார்கள் ஆகவே புதிய சனாதிபதி அவர்கள் அவரது குறிக்கோளை அடைய வேண்டுமானால் தனது கொள்கையை ஏற்று நடக்கும் நிர்வாகிகளை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியை நடத்த வேண்டும்.

இதில் அறிமுகம், சொந்த பந்தங்கள், நட்புறவுகளை பார்க்காமல் இவர்கள் அனைவரையும் நீக்கி விட்டு புதிய நிர்வாகிகளை நியமித்து ஆட்சி நடத்த வேண்டும். அமைச்சர்களை நியமிக்கும் பொழுதும் ஆலோசகர்களை நியமிக்கும் பொழுதும் புதிய சனாதிபதி அவர்கள் ஒரு கோழையாக செயற்படக்கூடாது. திறமைசாலியாகவே செயற்பட வேண்டும். நாட்டை ஆட்சி புரிந்த தலைவர்கள் ஆட்சி புரிந்த அரசியல் கூட்டமைப்புகளினால் இலங்கையின் விவசாயம் நாசமாக்கப்பட்டது. நாட்டின் தேசிய நீர்வளம், கல்வி, அரச சொத்துக்களை அந்நியர்களுக்கு விற்பனை செய்தல் போன்றவற்றினால் அரசாங்கம் பயங்கர பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. மேற்கூறியவைகள் யாவும் இந்நாட்டில் ஏற்படா வண்ணம் ஆட்சியை திறம்பட சனாதிபதி நடத்துவதற்கு முன்வரவேண்டும். தேர்தலின் பொழுது 350/= ரூபாவிற்கு பசளை விநியோகம் செய்யப்படும் என்ற உறுதிமொழியையும் வழங்கி உள்ளார். அதாவது நாட்டின் விவசாயம் சம்பந்தமாக சிறந்த தேர்ச்சி பெறாமல் வாக்குறுதி வழங்கி இருந்தால் இது தேர்தலுக்காகவே கையாளப்பட்ட ஒரு யுக்தி என நாம் கருதவேண்டும்

மற்றும் நமது தேசிய வளங்களைப் பயன்படுத்தி சிறந்த பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும் என்ற சிந்தனையுடன் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தால் இதை நாம் வரவேற்கிறோம். இது சம்பந்தமாக விவசாய நிபுணத்துவம் பெற்றவர்களின் உதவிகளை நாட வேண்டி வரும் அப்படி இவர்களின் ஆலோசனைகளை அமுல்படுத்தாமல் பழைய நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கு முயற்சித்தால் அது மேலும் பாரதூரமான விளைவுகளை உண்டு பண்ணும்.


நாம் எமது நாட்டின் வளங்களை இதுவரை முறையாக பயன்படுத்தவில்லை. ஆகவே நாம் நலன்புரி உதவிகளை எதிர்பார்த்திருக்காமல் நாட்டில் உள்ள கிராமிய உற்பத்திகளை வலுப்படுத்துவதற்கு பெரு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தற்போதைய புள்ளி விபரங்களின் படி 21 இலட்சம் குடும்பங்கள் சமுர்த்தி நலன்களை பெற்றுவருகின்றன. இவர்கள் நாட்டின் அபிவிருத்திகளுக்கு பெரும் சவாலாக உள்ளனர். புதிய சனாதிபதி அவர்கள் இவர்களுக்கான நன்மை தரும் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இதுவரை தேசிய உடமைகளை முறையான கட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கு தவறிவிட்டபடியால் தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து அவைகளை ஊக்குவிக்க வேண்டும்: மேலும் வருடக்கணக்கில் இயங்காமல் இருக்கும் அரச சேவைகளை மீண்டும் இயங்க வைத்து அதைநாட்டின் அபிவிருத்திக்கு பயன் படுத்துவது மிக அவசியமாகும்: இவைகளை விளம்பரப்பலகைகளில் எழுதுவதனால் பயன் எதுவும் ஏற்படாது. அரச சேவைகளில் இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு சனாதிபதி அவர்கள் திட்டங்களை வகுக்க வேண்டும். பத்து இலட்சம் வேலை வாய்ப்புகளை வழங்குவதாக தேர்தல் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. சகலருக்கும் அரச உத்தியோகம் தருவோம் என்ற பிரச்சாரங்களை கொஞ்சம் தள்ளி வைக்கவும் தற்பொழுது உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் சுகாதார திணைக்களத்தை மறுசீரமைக்கவும் முன்வர வேண்டும் மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு உடன் நடவடிக்கைகளைச் சனாதிபதி ஆரம்பிக்க வேண்டும: இவைகளைச் செய்யாவிட்டால் பசளை 350 ரூபாவாகவும், பத்துஇலட்சம் வேலைவாய்ப்புகள், முன்பள்ளி சிறுவர், சிறுமியர்களுக்கு பால் வழங்கும் திட்டங்களை மேற்கொள்வது மிகக் கடினமான விடயமாகும்.


இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கான திட்டங்களை வகுப்பது மிக அவசியமாகும். சுனாமிப் பேரலைகளின் அனர்த்தங்களுக்கும். வெள்ள அபாய அனர்த்தங்களின் பொழுது முகம் கொடுத்த அனுபவங்கள் நமக்கு உண்டு. தேசிய அனர்த்தங்களின் பொழுது முகம் கொடுப்பதற்கான திட்டங்களை இப்பொழுது நாம் ஆரம்பிக்க வேண்டும் உள்வீட்டார் மற்றும் வெளிவீட்டார் மத்தியில் இருக்கும் எதிரிகளிடத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும். ஏனெனில் அரசியல் போராட்டத்தில் அவர் தனி ஒருமனிதனாகவே திகழ்கின்றார். ஆகவே தனது அரசியல் எதிரிகள் நண்பர்களை இனங்கண்டு நாட்டுக்கு ஆதரவளிக்கும் அறிவாளிகளை இணைத்துக் கொண்டு அரசியலை நடத்த வேண்டும். வெளிநாட்டு கடன் பழுவில் இருந்து மீள்வதற்கு திட்டம் ஒன்றினை வகுக்க வேண்டும். தேசிய அபிவிருத்தியை ஊக்குவித்தால் வெளிநாட்டு கடன்களில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும். இம்முறை சனாதிபதித் தேர்தலில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு முடிவு கட்டி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது சனாதிபதிக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. சமாதானப் பேச்சு வார்த்தைகளை மேலும் முன்னெடுத்து செல்வாரா இல்லையேல் வேறு மார்க்கமூலமாக தீர்வு காண்பாரா என்பதை மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம்களின் தலைவராகவே இருக்கின்றார். மற்றும் மக்கள் ஆதரவைப் பெற்ற இவர் இம்மூன்று இனங்களையும் காப்பாற்றுவது இவரது கடமையாகும். தெற்கில் உள்ள சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று அவர்களின் பிரச்சினையை மட்டும் தீர்க்கமுடியாது. ஆகவே வடக்குகிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் தீர்ப்பதில் இவர் கவனம் செலுத்தினால் சிறுபான்மை இன மக்களின் ஆதரவும் இவருக்குக் கிடைக்கும்.

அதேநேரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புதியவர்களை இணைத்துக்கொள்வதானால் அவர்களை இணைப்பதில் மிக அவதானமாக புதிய சனாதிபதி அவர்கள் செயற்பட வேண்டும். சமாதானப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக சிறந்த ராஜதந்திர முறைகளைக் கையாளாவிட்டால் பெரும் அரசியல் சிக்கலுக்குள் மாட்டிக்கொள்ள நேரிடும். இந்த நாட்டின் உயர்ந்த பதவியைக் கைப்பற்றுவதற்கு இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பொழுது இவருக்கு ஏற்பட்ட இடையூறுகள், எதிர்ப்புகள் எல்லாவற்றையும் சமாளித்து சனாதிபதி பதவியைக் கைப்பற்றினார். ஆனால் இனிவரும் அரசியல் எதிர்ப்புகளைச் சமாளிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். எதிர் காலத்தில் ஏற்படும் அரசியல் பிரச்சினைகளுக்கு முன் கூட்டியே திட்டங்களை இவர் தயார் செய்து கொள்ள வேண்டும். தேசிய பொருளா தாரத்தைக் கட்டி எழுப்புவதுடன் நாட்டின் இனப் பிரச்சினைக்கும் நல்லதொரு தீர்வை இவர் எடுக்க வேண்டும். இவைகளைப் புதிய சனாதிபதி அவர்கள் நிறைவேற்றத் தவறினால் இவரின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

○

# நியூயோர்க்கில் எழுச்சியுடன் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்







(நியூயோர்க்)

அமெரிக்காவில் முதலாவது மாவீரர் நாள் நிகழ்வு, உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஒழுங்கு படுத்தப்பட்டு, நியூயோர்க் மாநிலத்திலுள்ள குயீன்ஸ் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

அமெரிக்க மற்றும் தமிழீழ தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டதுடன்,மாவீரர் குடும்பங்களினால் ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நியூயோர்க் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலுமிருந்து பெருமளவு மக்கள் வருகை தந்து, வெகு சிறப்பாகவும் உணர்வு பூர்வமாகவும் கலந்து கொண்டனர்.

உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி ஜெயலிங்கம் , உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் தி.கருணாகரன் விடுதலைப் புலிகளின் சட்டாலோசகர் வி.உருத்திரகுமாரன் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.

அத்துடன், மாவீரர் குடும்பத்தினர் சூரியப்புதல்வர்கள் நினைவு நூல் வழங்கி அரங்கத்தில் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன்- அமெரிக்க கனேடிய கலைஞர்களின் நடன நிகழ்வுகள், கவிதைகள், நாடகம் என்பன நடத்தப்பட்டதுடன் இரவு 10.30 மணிக்கு நிகழ்வுகள் நிறைவெய்தின.

அடுத்துவரும் வாரங்களில் அமெரிக்காவின் ஏனைய எட்டு மாநிலங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

## இராணுவ மரியாதை வழங்கப்படாமலே சந்திரிகா சனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறுவார்?

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதியாகப் பதவி வகித்தமைக்காக அளிக்கப்படவேண்டிய இறுதி இராணுவ மரியாதை இன்னமும் அளிக்கப்படாத நிலையில் சனாதிபதி மாளிகையிலிருந்து விரைவில் சந்திரிகா குமாரதுங்க வெளியேற முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

நவம்பர் 19ஆம் திகதி சனாதிபதிப் பொறுப்பிலிருந்து வெளியேறிய சந்திரிகாவுக்கு சிறிலங்கா இராணுவத்தின் சார்பில் இறுதி மரியாதை அளிக்கப்படவேண்டும்.

புதிய சனாதிபதிக்கும் வெளியேறும் சனாதிபதிக்கும் 21 குண்டுகள் முழங்க அளிக்கப்பட வேண்டிய அந்த மரியாதை அளிக்காமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகிறது. அதனால் இன்னமும் சனாதிபதி மாளிகை யிலேயே சந்திரிகா தங்கியுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு இராணுவ மரியாதை அளிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் குறித்து கேள்வி எழுந்துள்ளதால் தாமாகவே சனாதிபதி மாளிகையிலிருந்து ஓரிரு நாட்களில் வெளியேறக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட கதிர்காமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் குடியேற சந்திரிகா திட்டமிட்டிருந்தாலும் கதிர்காமரின் பாரியார் சுகந்தி கதிர்காமர் இன்னமும் அந்த வீட்டிலிருந்து வெளியேறவில்லை. இன்று வியாழக்கிழமை வரை அவர் கால அவகாசம் கேட்டுள்ளார். சுகந்தி கதிர்காமர் வெளியேறுவதற்கு காலம் நீடித்தால் கொழும்பில் உள்ள தமது குடும்ப இல்லத்தில் தங்கியிருக்கவும் சந்திரிகா முடிவு செய்துள்ளளதாக சந்திரிகா அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தலைவர் பிரபாகரனின் உரையையடுத்து தமிழகக் கடலோரங்களில் கண்காணிப்பு அதிகரிப்பு

தமிழீழதேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்நாள் உரையையடுத்து தமிழ்நாட்டுக் கடலோரங்களில் இந்தியப் பாதுகாப்புப்படையினது கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக சிறிலங்கா அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நாளிதழான டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உபாலி ரூபசிங்க என்ற டெய்லி நியூசின் புதுடில்லி செய்தியாளர் அனுப்பியதாக வெளியிட்டுள்ள அந்தச் செய்தியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மீண்டும் விடுதலைப்போராட்டத்தைத் தொடங்க உள்ளதாகத் தெரிவித்துள்ளதை தமிழ்நாடு முதல்வர் ஜெயராம் ஜெயலலிதா தீவிர கவனத்தில் கொண்டுள்ளார்.

கடலோர கண்காணிப்புக்களில் தீவிரம் காட்டுமாறு புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். தமிழ்நாடு காவல்துறை மற்றும் கடலோர காவல்படையினர் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் மாநிலத்தில் மேற்கொள்ளாத வகையில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சியை முன்னெடுக்க தென்னிலங்கையில் இணக்கம் அவசியம்

### ஐ.தே.கட்சி பிரதிச் செயலர் திஸ்ஸஅத்தநாயக்க

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை உறுதியுடன் செயற்படுத்தும் போது தென்னிலங்கை அரசியலில் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

கட்சியின் பிரதிச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்; சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் தென்னிலங்கையிலும் இணக்கங்களை ஏற்படுத்துவது அவசியமாகும் எனத்தெரிவித்தார். சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய தலைவர் என்ற அடிப்படையில் இந்த விடயத்தில் உரிய நகர்வை மேற் கொள்வது அவசியமானதாகும்.

இதன்போது தமது கட்சி சனாதிபதிக்கு பூரணஆதரவை வழங்கும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

## வேல்ஸ் கத்தோலிக்க தலைவர் கொழும்பு வருவார்

ஆழிப்பேரலையின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு தாம் நத்தார் தினத்தில் கொழும்புக்கு வரவுள்ளதாக பிரித்தானிய வேல்ஸ் கத்தோலிக்க தலைவர் வணக்கத்துக்குரிய கர்தினால் கோமக்முராகோனரே தெரிவித்துள்ளார். எதிர்வரும் டிசம்பர் மாதம் 25ஆம் திகதியன்று இலங்கைக்கு வரும் அவர் கிழக்கிலங்கையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடவுள்ளார்.

அத்துடன் அங்கு இடம்பெறும் புனரமைப்பு பணிகளையும் அவர் பார்வையிடுவார்.

## இராணுவ முகாம் மீதான தாக்குதல் வழக்கு தமிழரை விடுதலைசெய்ய ஐ.நா.ம.உ. அமைப்பு வேண்டுகோள்!

சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் நபரை விடுதலை செய்யுமாறு சிறிலங்கா அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ முகாம் தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்ட நல்லரத்தினம் சிங்கராஜா என்பவருக்கு 20 ஆண்டுகால கடும் தண்டனையை சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் விதித்தது.

ஐ.நா. அமைப்பினது மனித உரிமை விதிமுறைகளுக்கு எதிராக தமக்குத் தண்டனை விதிக்கப்பட்டதாக நல்லரத்தினம் சிங்கராஜா முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து நல்லரத்தினம் சிங்கராஜாவை விடுதலை செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் வேண்டுகோள் விடுத்தது. இந்த வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு சிறிலங்கா உயர் நீதிமன்றத்தில் நல்லரத்தினம் சிங்கராஜா மேல்முறையீடு செய்தார்.

நல்லரத்தினம் சிங்கராஜாவின் மனுவை விசாரணை செய்த சிறிலங்கா உயர் நீதிமன்ற நீதிபதி சரத் என்.சில்வா இம் மனு தொடர்பாக ஆராய ஐந்து பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளார்.வழக்கின் விசாரணை இம்மாதம் ஐந்தாம் நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது போன்ற மனு இப்போதுதான் முதல் முறையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக சிறிலங்கா உயர் நீதிமன்றப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு வாழ் தமிழர்களின் எதிர்காலம் குறித்து அச்சம்!

### –மேல்மாகாண மக்கள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு வாழும் தமிழ் மக்களின் பாதுகாப்பு எதிர்காலம் பற்றி அச்சம் தோன்றியிருப்பதாக மேல் மாகாண மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. மேல் மாகாண மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மேல் மாகாணசபை உறுப்பினருமான பிரபாகணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குக்கரை மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்கியிருந்தார்கள் எனவும், எனினும், அவருக்கு வாக்களித்த தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு அந்தக் கட்சி தவறிவிட்டதெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமக்கு வாக்களிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், வடக்கு, கிழக்கு மக்கள் தமக்கு வாக்களிக் காததால்தான் தமக்கு தோல்வி ஏற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியும் கூறிவருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் முற்றுமுழுதாக தமது வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளித்த போதும், எந்தவிதமான பயனும் ஏற்படவில்லையெனவும், இந்த நிலையில் தமிழ் மக்கள் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பிரபா கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய மலையகக் கட்சியொன்றின் தலைவர், அமைச்சுப் பதவிக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் தவம் கிடப்பதாகவும், மேல் மாகாண மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மேல் மாகாணசபை உறுப்பினருமான பிரபா கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் கிளைகளுக்கான வருடாந்த கிளைப் பொதுச்சபைக் கூட்டம் பின்வரும் விப ரப்படி அந்தந்த கிளைகளில் காலை 9.00 மணிக்கு உதவி தேர்தல் உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

**ஆகவே குறிப்பிட்ட கிளைகளுக்குரிய அங்கத்தவர்கள் தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைகளின் கிளைக்குழு உறுப்பினர்களையும் பொதுச்சபைப் பேராளர்களையும் தெரிவுசெய்து உதவுமாறு வேண்டுகின்றேன். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் அறிவிப்பதற்கு கால அவகாசம் போதாமையினால் பத்திரிகை வாயிலாக இவ் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.**

**எனவே தயவுசெய்து பூரண ஒத்துழைப்பு நல்கும்படி பணிவுடன் வேண்டு கிறேன்.**

**10.12.2005 ஆம் திகதி:**

| கிளையின் பெயர்: | நடைபெறும் இடம்: |
|---|---|
| மாத்தளன் | அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை |
| முல்லை வடக்கு | முல்லை மகாவித்தியாலயம் |
| முல்லை தெற்கு | முல்லை மகாவித்தியாலயம் |
| சிலாவத்தை | றோ.க.த.க. பாடசாலை |
| அளம்பில் | றோ.க.த.க பாடசாலை |
| தண்ணீரூற்று | கிளைநிலையம் |
| கணுக்கேணி | கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் |
| கொக்குத்தொடுவாய் | நீராவிப்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலயம் |
| முள்ளியவளை – ஏ கிழக்கு | கிளைநிலையம் |
| முள்ளியவளை – பி. மேற்கு | அ.த.க.பாடசாலை |
| நீராவிப்பிட்டி | முஸ்லிம் மகாவித்தியாலயம் |

**11.12.2005 ஆம் திகதி:**

| கிளையின் பெயர்: | நடைபெறும் இடம்: |
|---|---|
| முள்ளிவாய்க்கால் | அ.த.க.பாடசாலை |
| செம்மலை | அ.த.க.பாடசாலை |
| கொக்கிளாய் | தண்ணீரூற்று சீ.சீ.பாடசாலை |
| கேப்பாபிலவு | அ.த.க.பாடசாலை |
| வற்றாப்பளை | அ.த.க.பாடசாலை |
| குமுளமுனை – ஏ – மேற்கு | மகாவித்தியாலயம் |
| குமுளமுனை – பி கிழக்கு | மகாவித்தியாலயம் |

திகதி 29.11.2005

அ.மரியாம்பிள்ளை,
தேர்தல் உத்தியோகத்தர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி.13471)

# பணிநிலை வேண்டுகை

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

எமது நிறுவனத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலை வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களை எமது மாவட்டச் செயலகங்களுக்கும் வட்டக்கச்சி நடுவப்பணியகத்திற்கும் 10.12.2005 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், அனுப்பி வைப்பவர்களுக்கு 14.12.2005 காலை 10.00 மணியளவில் நடுவப்பணியகத்தில் (வட்டக்கச்சியில்) நேர்முகத்தேர்வு நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

* **கணக்கு எழுதுநர்:**

க.பொ.த (உயர்தரம்) வர்த்தகப்பிரிவில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* **கணக்காய்வு எழுதுநர்:**

க.பொ.த (உயர்தரம்) வர்த்தகப்பிரிவில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* **கணக்காளர்:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவ மட்டத்திலான கற்கை நெறி ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

தேசிய உயர் கணக்கியல் டிப்ளோமா HNDA கற்கை நெறிபூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

க.பொ.த (உயர்தரம்) வர்த்தகப்பிரிவில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், ஏதாவது நிறுவனத்தில் 03 வருடங்களுக்குக் குறையாமல் கணக்காளராகக் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

* **கணக்கு பதிவாளர்:**

க.பொ.த (உயர்தரம்) வர்த்தகப்பிரிவில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், ஏதாவது நிறுவனத்தில் 03 வருடங்களுக்கு குறையாமல் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

* **உள்ளகக் கணக்காய்வாளர்:**

தேசிய உயர் கணக்கியல் டிப்ளோமா HNDA கற்கை நெறி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது நிறுவனம் ஒன்றில் 03 வருடங்களுக்கு குறையாமல் உள்ளகக் கணக்காய்வாளராக கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

* **கணியவியலாளர்:** ஆண்கள் மட்டும்

குடிசார் இயந்திரவியல் கற்கைநெறி, (B.S.C, N.T.T OR N.C.T) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

நிறுவனம் ஒன்றில் கணியவியலாளராக பணியாற்றிய 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

* **வேலை மேற்பார்வையாளர்:** ஆண்கள் மட்டும்

க.பொ.த சாதாரணம் அல்லது க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருப்பதுடன், ஏதாவது நிறுவனத்தில் 03 வருடங்களுக்கு குறையாமல் வேலை மேற்பார்வையாளராக கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

அல்லது

கட்டடத்துறை, குளப்புனரமைப்புப், பணிகளில் ஆர்வமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

* **பிரதேச இணைப்பாளர்:** ஆண்கள் மட்டும்

க.பொ.த சாதாரணம் (ஆறு பாடங்களில்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

* அரசியல் துறை சம்பள அளவுத்திட்டத்தின்படி வழங்கப்படும்.

* ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுபவர்களுக்கு சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:** இடதுபக்க மேல் மூலையில் பணிநிலையின் தன்மை குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியமுகவரி**
**பொறுப்பாளர்,**
**த.பொ.மே, நிறுவனம், நடுவப்பணியகம்,**
**வட்டக்கச்சி, கிளிநொச்சி.**

(சி.13292)

# 80 பேர் கொண்ட அமைச்சரவைக்கு ஜே.வி.பி.எதிர்ப்பு: அமைச்சர்களிடம் விலகல் கடிதம் கோருகிறார் மகிந்த!

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 80 பேர் கொண்ட அமைச்சரவையை அமைத்துள்ளதற்கு அவருக்கு ஆதரவளிக்கும் ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதையடுத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள மற்றும் பிரதி அமைச்சர்கள் பலரிடம் விலகல் கடிதங்களை வழங்குமாறு மகிந்த ராஜபக்ஷ கேட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி.யின் முன்னணித் தலைவரான அநுரகுமாரதிசாநாயக்க, மகிந்தவின் அமைச்சரவை தொடர்பில் தெரிவித்திருந்த கருத்தையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதுகுறித்து அநுர குமார திசா நாயக்க கூறியிருந்ததாவது,

ஒரு சிறிய அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும் என்பது தான் ஜே.வி.பி.யின் விருப்பம். ஆனால் அதற்கு நேர்எதிர்மாறாக நடந்துள்ளது.

80 அமைச்சர்கள் இப்போது உள்ளனர். மகிந்த ராஜபக்ஷவினது அரசாங்கம் ஒரு சிறுபான்மை அரசாங்கம் தான். ஜே.வி.பி,ஜாதிக ஹெல உறுமய ஆகியவை அமைச்சரவையில் இன்னும் இணையாத நிலையிலேயே 80 அமைச்சர்கள் உள்ளனர். ஆதலால் அமைச்சர்களை நீக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம் என்றார்.

இந்தக் கருத்தையடுத்து பலரது அமைச்சுப் பொறுப்புக்கள் பறிக்கப்படும் நிலையில் உள்ளன.

# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு

வவுனியா வடக்குப் பகுதியில் புளியங்குளம் வடக்குப் பகுதி கிராமங்களான புதூர், பரசன்குளம், புதூர் சந்தி ஆகிய கிராமங்களில் ரி. ஆர்.சி.ரி. ஆர்.ஓ. நிறுவனங்களின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த 23 ஆம் திகதி மலசலகூடப் பாவனையாளர்களுக்கான சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நடைபெற்றது.


இந்நிகழ்வில் மூன்று கிராமங்களைச் சேர்ந்த நாற்பதிற்கும் மேற்பட்ட மலசலகூடப் பாவனையாளர்களும், வவுனியா மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் இணைப்பாளர்களும் மற்றும் புளியங்குளம் வடக்கு தமிழர் புனர் வாழ்வுக் கழக இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கில் மலசலகூடம் சார்ந்த சுகாதார விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

# நெடுங்கேணி அ.பு.நிறுவனத்தால் நான்கு இலட்சம் ரூபா சுழற்சிமுறைக்கடன்

நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் டி. ஆர். சி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெடுங்கேணிப் பிரதேசத்தின் குளவிசுட்டான் கிராமத்தில் கடந்த 26 ஆம் திகதி 2.00 மணியளவில் தனிநபர் தொழில் விருத்திக்காக 20 பயனாளிகளுக்கு தலா இருபதாயிரம் ரூபா வீதம், மொத்தமாக நான்கு இலட்சம் ரூபா சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர், வெளிக்கள உத்தியோகத்தர், சமூக வலுவூட்டாளர், கிராம அலுவலர், பிரதேச அரசியல்துறை உறுப்பினர், சமூக,பொருளாதார அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், கடன் அனுமதிக்குழு உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இரங்கல் செய்தி



அமரர்

**வே.பொன்னுத்துரை**

**எமது தமிழரசு நகைத் தொழிலகத்தில் உற்பத்தியாளராகக் கடமையாற்றிய அமரர் வே.பொன்னுத்துரை என்பவர் இயற்கைஎய்திய செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். இவ்வேளை அன்னாரது குடும்பத்தாரின் துயரிலும் பங்குகொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

பணிப்பாளர்,பொறுப்பாளர்,
ஊழியர்,உற்பத்தியாளர், நகைவாணிபம்

(7063)

# வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

**கிராமத் தெரிவின் போது பின்வரும் வகுதியான கிராமங்களை/பிரதேசங்களை தவிர்த்தே திட்டத் தெரிவு இடம்பெறும். தவிர்க்கப்படும் வகுதியான கிராமங்கள் / பிரதேசங்கள் வருமாறு.**

- யுத்தத்தினால் வீடுகள் பாதிப்படையாத கிராமங்கள்
- வேறு ஏதாவது புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் முழுமையாக வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராமங்கள்.
- வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வீடுகள் முழுமையாக புனரமைப்புச் செய்யப்பட்ட கிராமங்கள்.
- சுனாமி புனர்நிர்மாண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் /பிரதேசங்கள்.
- கடல் பாதுகாப்பு வலயத்துக்குட்படும் கிராமங்கள்.

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட வரையறைக்குட்படாத கிராமங்களை புள்ளியிடல் அடிப்படையில் கணனி முறைப்படுத்தி தெரிவு இடம்பெறுகின்றது.**

**எனவே உங்கள் கிராமமும் இத்திட்டத்திற்குத் தெரிவாகியுள்ளதா என்பதை அறிய:-**

**தொடர்ந்தும் நாளைய பத்திரிகையை வாசியுங்கள்**

(சி.13459)

# சுற்றுலா சென்றவர்கள் ஆற்றில் மூழ்கி மரணம்

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் சுற்றுலா ஒன்றுக்காகச் சென்ற மாணவர்களில் 11பேர் ஆற்று நீரினுள் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

ரவீந்திரபாரதி பாடசாலையிலுள்ள 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் 22 பேருந்துகளில் சுற்றுலா சென்றுள்ளனர். சுற்றுலா சென்ற மாணவர்களில் 18பேர் ஆற்றில் நீந்துவதற்காகச் சென்ற வேளை 11 பேர் நீரினுள் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த ஐந்து மாணவர்களின் சடலங்கள் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கரவலை தொழில் உரிமையாளர்களுக்கான விசேட பொதுக்கூட்டம்

மேற்படி முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் ஆளுகைக்குட்பட்ட நல்லதண்ணித் தொடுவாயிலிருந்து நாயாறு வரையான பகுதிகளில் கரவலை தொழில் செய்யும் உரிமையாளர்களுக்கான பொதுக்கூட்டம் எதிர் வரும் 05.12.2005 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சமாசத் தலைமை அலுவலகத்தில் நடை பெறும் என்பதனை அறியத்தருகின்றேன். இக்கூட டத்தில் 2005 ஆம் ஆண்டுகளில் தொழில் செய்தவர்களைத் தவறாது கலந்துகொள்ளு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**அ.மரியராசா**
**கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர்,**
**முல்லை மாவட்டம்.**

(சி.13476)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக்கிளை

SRI LANKA RED CROSS SOCIETY

## உதவிக் கணக்காளருக்கான பதவி வெற்றிடம்

எமது தாபனத்திற்கு உதவிக் கணக்காளர் பதவி வெற்றிடம் இருப்பதால் தகுதி உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகமை:-** *பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கியல் பட்டம்/அல்லது அதுக்கேற்ப தகுதியான அங்கீகரிக்கப்பட்ட தகைமை/ உயர்தரப்பரீட்சை யில் வர்த்தகம் உட்பட சித்தியடைந்திருத்தல்.*

**வயது எல்லை:-** 25 - 45

**அனுபவம்:-** *ஐந்து வருட அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அனுபவம்.*

**வதிவிடம்:-** *கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தரமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.*

**கணினி:-** *காரியாலய முகாமைத்துவ கணினி சான்றிதழ் இருத்தல் வேண்டும்.*

மேற்படி தகுதியுடையோர் எதிர்வரும் 05.12.2005இற்கு முன் தங்களது விண்ணப்பங்களை கௌரவ தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:-** *கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடல் வேண்டும். நேர்காணலுக்கான கடிதம் அனுப்பி வைக்கப்படும்.*

**இ.கார்த்திகேசு,**
**கௌரவ தலைவர்.**

(சி-13412)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை

SRI LANKA RED CROSS SOCIETY

## சாரதிகள் பதவிக்கான பதவி வெற்றிடங்கள்

**எமது தாபனத்திற்கு சாரதிகள் தேவையாகவுள்ளது.**

**கீழ்காணும் தகுதியுடையவர்கள் அப்பதவிற்கு விண்ணப்பிக்கலாம்.**

**தகைமை:-**

1. *ஜி.சி.ஈ. சாதாரன தரம் அல்லது எட்டாம் வகுப்பு பரீட்சையில் சித்திய டைந்திருத்தல்.*
2. *வாகன சம்பந்தமான திருத்தங்கள் செய்யும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.*
3. *கனரக வாகன அனுமதிப் பத்திரம் (கணினி செய்து) இருத்தல் வேண்டும்.*
4. *அனுபவம் 05 வருடங்கள்.*
5. *கிளிநொச்சியை பிறப்பிடமாக உள்ளவராயின் முன்னுரிமை வழங்கப்படும்.*

**விண்ணப்ப முடிவுத்திகதி 05.12.2005**

**குறிப்பு:-**
*கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடல் வேண்டும். மேற்படி தகுதி உடையவர்கள் எதிர் வரும் 05. 12. 2005க்கு முன் தங்கள் விண்ணப்பங்களை கௌரவ தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக்கிளை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

*நேர் காணலுக்கான கடிதம் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.*

**இ.கார்த்திகேசு,**
**கௌரவ தலைவர்.**

(சி-13413)

# அவுஸ்-தெ.ஆ. முதலாவது டெஸ்ட் ஸ்மித் விளையாடுவது சந்தேகம்



அவுஸ்திரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவின் அணித் தலைவர் ஸ்மித் விளையாடுவது குறித்து தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை சந்தேகம் கொண்டுள்ளது.

மூன்று டெஸ் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்க அடுத்த மாதம் தென்னாபிரிக்கா அணி அவுஸ்திரேலிய பயணமாகவுள்ளது.

இந்நிலையில் இப்போட்டித் தொடரில் முதலாவது போட்டியில் ஸ்மித் விளையாடுவாரா என்பது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை சந்தேகம் தெரிவித்துள்ளது.

இதற்கு இந்திய அணிக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது விரலில் ஏற்பட்ட காயம் குணமடையாததே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சென்னையில் போட்டிகள் நடத்த தடை விதிக்க வேண்டும்

### கிரிக்கெட் ரசிகர் வழக்குத் தாக்கல்

வழமையாக ஒக்ரோபர் முதல் டிசம்பர் வரை வடக்குகிழக்குப் பருவ மழைகாலம் என்பதால் இனிமேல் இக்காலப் பகுதியில் சென்னையில் சர்வதேச ரீதியில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியையோ, ஒருநாள் போட்டியையோ நடத்த தடைவிதிக்கப்படவேண்டும் எனக்கோரி ரசிகர் ஒருவர் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார். இது பருவ மழைக்காலம் என்றும் வேண்டும் என்றே இம்மாதங்களில் போட்டிகளை நடத்துகின்றார்கள் என்றும் இதனால் கிரிக்கெட் பார்க்கும் ரசிகர்களுக்கு இழப்பு ஏற்படுகின்றது என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.




# இந்திய கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக சரத் பவார்




இந்திய கிரிககெட் சபையின் புதிய தலைவராக மத்திய அமைச்சர் சரத் பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற இதற்கான தேர்வில் அவர் ஒன்பது மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து முன்னாள் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா போட்டியிட்டார். இவருக்கு ஆதரவாக ஜக்மோகன் டல்மியா கடுமையாகப் பாடுபட்டபோதும் அவரால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. சரத்பவர் மகா ராஷ்டிர கிரிக்கெட் சபைத் தலைவராகவும் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது. சபையின் செயலாளராக நிரஞ்சன்ஷாவும் இணைச்செயலாளராக பாண்டோவும் பொருளாளராக சீனிவாசனும் தெரிவாகினர்.

இதற்கிடையில் புதிய சபை பதவியேற்றதும் கங்குலியின் பிரச்சினை தீர்ந்து விடுமா என்று நிருபர்கள் கேட்டதற்கு அது தேர்வாளர்களின் பொறுப்பு என டால்மியா தெரிவித்துள்ளார்.


# கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் பூபதி-சானியா ஜோடி சேரும்

இந்தியாவின் டென்னிஸ் இயம்புயல் சானியா மிர்சா அவர் தனது ஆக்ரோச ஆட்டத்தால் அனைவரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துள்ளார். இந்நிலையில் டெல்லியில் வருகிற 3ஆம் திகதி கலப்பு இரட்டையர் பிரிவு டென்னிஸ் போட்டி நடைபெறுகிறது. இதில் சானியா, மகேஷ்பூபதியுடன் இணைந்து விளையாடவுள்ளார்.



# இந். சிறிலங்கா டெஸ்ட் போட்டி சென்னையில் நாளை ஆரம்பம்





இந்திய-சிறிலங்கா அணிகளுக்கிடையில் நாளை சென்னையில் ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டிகளுக்காக இலங்கை அணிவீரர்கள் தீவிரபயிற்சியிலீடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் நடைபெற்ற இரு அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித்தொடரை ஆறுக்குஒன்று என்ற ரீதியில் இழந்ததையடுத்து மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை கைப்பற்றி நாடு திரும்ப வேண்டும் என்ற முனைப்பில் சிறிலங்கா அணி இந்தியா சென்றுள்ளது. சிறிலங்காவை ஒரு நாள் தொடரில் வென்றதுடன் அண்மையில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணியுடனான ஒருநாள் தொடரை இரண்டுக்கு இரண்டு என்ற ரீதியில் சமன் செய்துள்ளதால் இந்திய அணி தெம்புடனும், நம்பிக்கையுடனும் காத்திருக்கிறது.

எனினும் சென்னையில் தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதால் நாளைய போட்டியும் மழை குறுக்கிட்டு விடுமோ என ரசிகர்கள் குழம்பிய நிலையிலுள்ளனர்.

# கொலிங்வூட்டின் பதிலடி

அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத்தவறிவிட்டமை தொடர்பில் பல விமார்சனங்களுக்குள்ளான இங்கிலாந்து கிரிக்கெட்டின் சகலதுறை வீரர் வோல் கொலிங்வூட் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தற்போது லாகூரில் நடைபெற்று வரும் பாகிஸ்தனுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது நாள் ஓட்டத்தில் ஆடமிழக்காது 71 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவரது ஆட்டத்திறன் தொடர்பில் முன்னாள் வீரர் ஜெப் போய் கொட் விமர்சனம் செய்தார். இது தொடர்பாக கொலிங்வூட் தெரிவிக்கையில்; கடந்த ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும் தனது திறன் வெளிப்படாததையிட்டு பசின்சன் விமர்சித்ததை தான் விளங்கிக் கொண்டதாகவும் அதற்காக தான் எதையாவது செய்ய வேண்டும் என சிந்தித்ததாகவும் தெரிவித்தார்.

# பாக். இங்கிலாந்து மூன்றாவது டெஸ்ட்; இங். முதல் இனிங்ஸ் 288, பாக். 185/4







(லாகூர்)

லாகூரில் நடைபெறும் இங்கிலாந்துடனான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் பாகிஸ்தான் அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது தனது முதல் இனிங்சில் நான்கு விக்கெட்டுக்களையிழந்து 185 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சொகைப் மாலிக் ஆறுபந்துகளை சந்தித்து ஓட்டம் பெறாமல் கோகாட்டின் பந்தின் பிளங்கட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்• சல்மன் 28 ஓட்டங்களையும், அசிம்கமல் ஐந்து ஓட்டங்களையும் , ஹசன்ராசா 21 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக் 35 ஓட்டங்களைப் பெற்றநிலையில் காயமடைந்து பார்வையாளர் அரங்கிற்குத் திரும்பினார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் கோகாட் இரண்டு விக்கெட்டுக்களையும், ஹார்மிசன், பிளங்கட் இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சில் 288 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அவ்வணியின் சகல துறை வீரர் போல் கொலிங்வூட் 96 ஓட்டங்களையும் ரெஸ்கொதிக், அணித்தலைவர் மைக்கல் வோன் முறையே 50,58 என்ற ஓட்டங்களையும் பெற்றனர். மற்றும் பீற்றர்சன் 34 ஓட்டங்களையும் மேலும் ஒரு சகலதுறை வீரர் பிளின்டொப் 12 ஓட்டங்களையும், உடல் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பெல் உட்பட ஏனைய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.


பந்துவீச்சில் சொகைப் மாலிக் மூன்று விக்கெட்டுக்களையும், நவிட் உல்ஹசன், டனிஸ் கனேரியா, மொகமட் சபி ஆகியோர் இவ்விரண்டு விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

நேற்று ஆட்ட நேர முடிவில் மொகமட் யூசுப் 84 ஓட்டங்களுடனும் சொகைப் அக்தர் ஓட்டம் பெறாத நிலையிலும் களத்தில் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.







# மும்பை ஒரு நாள் போட்டி; தென்.ஆபி. வீரர் நெல்லுக்கு அபராதம்!

மும்பையில் கடந்த 28ஆம் திகதி இந்தியா தென்னாபிரிக்க அணிகள் இடையே கடைசி ஒருநாள் போட்டி நடந்தது. இதில் இந்தியா வெற்றி பெற்றது.

அந்தப்போட்டியின்போது தென்னாபிரிக்க வீரர் ஆன்ட்ரி நெல் சில நேரங்களில் ஆவேசப்பட்டார். ஆக்ரோசமாகக் கத்தினார். தொலைக்காட்சியின் அந்தப் போட்டியை நேரடி ஒளிபரப்பில் பார்த்துக் கொண்டிருந்த இலட்சக்கணக்கான ரசிகர்கள் இதைக் கவனித்தார்கள்.நெல் அப்படி நடந்து கொண்டதற்காக அம்பயர் ஜெப்குரோ நேற்று நடவடிக்கை எடுத்தார். இதற்காக நடந்த விசாரணையில் நெல் தென்னாபிரிக்க அணித்தலைவர் கிரேம்ஸ்மித் அந்த அணியின் முகாமையாளர் கூலாம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.அவர்கள் தரப்பு கருத்தைக்கேட்ட பின்னர் நெல் மைதானத்தில் ஒழுங்கீனமாக விதிமுறைகளுக்கு முரணாக நடந்து கொண்டதற்காக அவருக்கு அப்போட்டியில் வழங்கப்பட்ட சம்பளத்தில் 20 சதவீத தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

டி.வி அம்பயர் சிவராம் களநடுவர்கள் டரல் ஹார்ப்பர் ஹரிகரன் நான்காவது நடுவர் ரவி சுப்பிரமணியம் ஆகியோர் நெல் தகாத வார்த்தைகளால் திட்டினார் என்கிற புகாரை எழுப்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பேரில் விசாரணை நடத்தப்பட்டு நெல்லுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு தென்னாபிரிக்க அணியினர் தரப்பில் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.


# இங். வீரர் ஹைஸ்ஸிக்கு அடுத்த வாரம் சத்திரசிகிச்சை

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுழல்பந்துவீச்சாளர் அஸ்லி ஹைல்ஸ் அடுத்த வாரம் சத்திரசிகிச்சை ஒன்றுக்கு முகம் கொடுக்கவுள்ளார்.எனினும் வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள இந்தியாவுடனான தொடரில் அவர் பங்கு பற்றும் நம்பிக்கையில் உள்ளார்.

ஹைல்ஸ் பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட்டின் இடுப்பில் காயத்துக்குள்ளானார். அதனால் அவ்வணியுடனான மூன்றாவது போட்டிக்கான வாய்ப்பை இழந்தார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கும்போது, காயத்துக்காக விரைவில் சிகிச்சைபெற்று இந்தியாவுடனான போட்டிக்கு உடல்தகுதியைப் பெற்றுவிடவேண்டும் என்பதற்காகவே இப்போதே சத்திரசிகிச்சைக்கு முகம்கொடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார். இந்த சிகிச்சைக்காக மூன்று மாதங்கள் ஓய்வில் இருக்கவேண்டியிருக்கும் என்று தெரிவித்த அவர் மிகவும் எதிர்பார்ப்புடன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ததாகவும் ஆயினும் அது ஏமாற்றமளிப்பதாகவும் தெரிவித்ததுடன் இந்தியாவுடனான போட்டித்தொடரில் கலந்துகொள்வதை எதிர்ப்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

## சிந்தனைக்கு



விழிப்புத்தான்
விடுதலைக்கு முதற்படி

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 01.12.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## புறக்கணிப்பு!

இனப்பிரச்சினையில் சமாதான ஏற்பாட்டாளரான நோர்வே அரசு தனது பங்கு குறித்து குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளது போல் தெரிகின்றது. இதன் வெளிப்பாடாகவே நோர்வே அமைச்சரும், முன்னர் சமாதான முயற்சிகள் தொடர்பான விசேட தூதுவருமான எரிக்சூல் ஹெய்மின் இலங்கை வருகையும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டமை கொள்ளத்தக்கது.

நோர்வே அமைச்சர் எரிக் சூல்கெய்ம், கடந்த 28 ஆம்திகதி இலங்கைக்கு வருகை தருவதாக ஏற்பாடாகியிருந்தது. அதிலும், சனாதிபதித் தேர்தலில் மகிந்தராஜபக்ஷ வெற்றி பெற்ற பின்னரும் இது உறுதிப்படுத்தப்பட்டதொன்றாகவே இருந்தது. ஆனால், வருகை தரவிருந்த இரு தினங்களுக்கு முன்னர் அவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

புதிய சனாதிபதி மகிந்தராஜபக்ஷவும், அவரது கூட்டாளிகளும் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்கை காட்டமாக விமர்சித்து வந்தமை வெளிப்படையானதொன்றே. சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவோம் என அவர்கள் வாக்குறுதியையும் வழங்கிவந்ததுண்டு. ஆனால், இத்தகைய பேச்சு தேர்தல் முடிவின் பின்னர் தணிவடையும் என பரவலான எதிர்பார்ப்பொன்று அரசியல் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்ததுண்டு.

ஆனால், இவர்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் தேர்தல் முடிவின் பின்பு ஏற்படவில்லை. மகிந்தராஜபக்ஷ நோர்வே தரப்பைக் கண்டுகொள்ளாதது மட்டுமல்ல, அவரின் சில நடவடிக்கைகள் நோர்வே தரப்பிற்கு ஏற்றதாகவும் இருக்கவில்லை என்றே கூறலாம். ஒட்டுமொத்தத்தில் நோர்வே தரப்பை மகிந்தராஜபக்ஷ பொருட்படுத்தியதாக இல்லை.

அவ்வாறு இல்லாதுவிடின், சனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றிபெற்றதன் பின்னர் நிகழ்த்திய உரையிலோ,அன்றி பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையிலோ, அன்றி வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நடந்த சந்திப்பிலோ சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்து அவர் பிரஸ்தாபித்திருத்தல் வேண்டும்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ எந்தச் சந்தர்ப்பத்திலும் நோர்வே சமாதான முயற்சிகளில் கடந்த காலத்தில் ஆற்றிய பங்கு பணிபற்றியோ அன்றி, எதிர்காலத்தில் அதன் பங்கு பணி பற்றியோ பேசவில்லை. குறிப்பிட்டுக் கூறுவதானால் நோர்வே என்றதொருநாடு இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்கதொரு பாத்திரத்தை வகித்தமை தனக்குத் தெரியும் என்று கூட அவர் காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

மாறாக மகிந்தராஜபக்ஷவின் நடவடிக்கைகள் சில, நோர்வே அரசை சமாதான முயற்சிகளில் இருந்து வெளித்தள்ளும் சமிக்ஞைகளை வெளிப்படுத்துபவையாகவே இருந்தன. குறிப்பாக கடும் போக்காளரான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை பிரதமராக நியமித்தமை; சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையில் அண்டைய நாடுகளுக்கும், ஆசிய நாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் எனக் கூறியமை நோர்வேயின் பணிக்கு ஏற்புடையதாக இருக்கமாட்டாது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்னர் பிரதமராக இருந்த போது சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நோர்வே தரப்புடன் முரண்பாடான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தார். சில சமயங்களில் சாதாரணமாக இராஜதந்திரிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் மரியாதைகளைக்கூட நோர்வேத் தரப்பிற்கு அளிக்க அவர் தயாராக இருக்கவில்லை.

அடுத்ததாக, அணிசேரா நாடுகள், அண்டை நாடுகள் என்ற மகிந்தவின் பேச்சு நோர்வேயிடம் இருந்து சமாதான ஏற்பாட்டாளர் பாத்திரத்தை பிராந்திய அன்றி கிழக்காசிய நாடுகளின் கைகளுக்கு மாற்றும் போக்குக் கொண்டதாகவே கருத வைக்கின்றது. அதிலும் குறிப்பாக இந்தியாவை சமாதான ஏற்பாட்டாளராக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறியவருகின்றது.

இத்தகையதொரு நிலையில் தான் நோர்வே அமைச்சரும் முன்னர் சமாதான பேச்சுக்கான விசேட தூதருமான எரிக் சூல்கெய்ம் தனது கொழும்பிற்கான பயணத்தை இரத்துச் செய்துள்ளார். அதாவது நோர்வேயின் பங்களிப்பிற்கானதொரு எந்தவொரு அக்கறைகளையோ, வரவேற்புக்களையோ மகிந்த ராஜபக்ஷ வெளிக்காட்டாமை இவ் இடைநிறுத்தத்திற்குக் காரணமாகும்.

சமாதான முயற்சியில் ஈடுபடும் நோர்வே இருதரப்பின் வேண்டுகோளின்படியே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இதில் ஒரு தரப்பு அழைக்காதுவிட்டாலோ, அன்றி நோர்வேக்கு எதிராகச் செயற்பட்டாலோ நோர்வேயின் பங்களிப்பு தேவையற்றது என்பதே அர்த்தமாகும். இத்தகையதொரு நிலையையே தற்பொழுது மகிந்தராஜபக்ஷ தோற்றுவித்துள்ளதாகத் தெரிகின்றது. இந்தநிலை நீடித்தால் நோர்வே சமாதான முயற்சிகளில் வெளியேற வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

# ஐ.நா.சபை பொதுச் செயலாளராக ஆசியப் பெண்ணொருவருக்கு வாய்ப்பு

## கொபிஅனான் தகவல்

ஐக்கியநாடுகள் சபைக்கு ஆசியப் பெண் ஒருவர் பொதுச் செயலாளராகக் கூடும் என்று தெரிகிறது.

ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனானின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு இறுதியில் முடிவடைகிறது.

செயலாளர் நாயகம் பதவியை ஆசிய நாடுகளுக்கு வழங்க வேண்டும் என்று ஆசிய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. சிறிலங்கா சார்பில் ஜயந்த தனபால, சிறிலங்காத் தூதுவர் ஜன்கட் பால், இந்திய எழுத்தாளர் சாசி நஃரோஸ், தாய்லாந்தின் துணைப் பிரதமர் சேர் அக்பர்ட் சதீ ஆகியோர் இந்தப் பட்டியலில் உள்ளனர்.

சிறிலங்காவும், தாய்லாந்தும் உத்தியோகபூர்வமாக தங்களது வேட்பாளர்களை அறிவித்துள்ளன.

இந்த நிலையில் அண்மையில் ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான், ஐ.நா. சபைக்கு பெண் ஒருவரை பொதுச் செயலாளராக்குவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகக் கூறினார்.

ஆசியாவில் இந்தப் பதவிக்குரிய பெண் எவரும் பட்டியலில் இல்லாத நிலையில் பாகிஸ்தானிய பெண் கொள்கை வகுப்பாளர் ஒருவரை பரிந்துரைக்கக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரித்து அணி திரட்டப் போவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கானா நாட்டைச் சேர்ந்த கொபி அனான் கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து வருகிறார்.

# சர்ச்சைக்குரிய மின்திட்டங்களை விரைவில் ஆரம்பிக்க மகிந்த திட்டம்!

(கொழும்பு)

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நுரைச்சோலை அனல் மின்நிலையம், மேல்கொத்மலைத் திட்டம், கெரவலப்பிட்டிய மின்நிலையத் திட்டம் ஆகியவை தொடர்பிலான அமைச்சரவை அறிக்கையை விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க உள்ளதாக மின்சக்தி அமைச்சர் டபிள்யூ.ஜே.செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த மின்திட்டங்களை விரைவில் தொடங்க மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக மின்சார சபைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் டபிள்யூ.ஜே.செனவிரட்ன கூறினார்.

மின்சார சபை ஊழியர்களை சந்தித்த டபிள்யூ.ஜே.செனவிரட்ன அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதுடன் அவர்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மின்சார சபையில் விரயம் மற்றும் மோசடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவித்த டபிள்யூ. ஜே.செனவிரட்ன, நாளொன்றிற்கு 45 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் கூறினார்.

மகிந்த சிந்தனையூடாக அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகையில் மின்சாரசபை அவற்றிற்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் முக்கிய சேவைகளை ஆற்றுகையில் தீர்மானங்களை எடுக்கத் தான் பின்நிற்பதில்லை. எனக் கூறிய அமைச்சர் கிராமங்களுக்கு உடனடியாக மின்சாரத்தை வழங்க உதவமுடியாவிடில் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் வெற்றியடைந்திருப்பதாகக் கொள்ள முடியாது. அவை இல்லை இவை இல்லை எனக் கூறிக்கொண்டிருக்காது மின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதிக்கு 36 அரச வாகனங்கள், 260 பணியாளர்கள்!

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஓய்வு பெற்றதன் பின்னர் அவரின் பாவனைக்காக 36 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் கடந்த நவம்பர் மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த 36 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் 260 பேரைக்கொண்ட பணியாளர் சபையும் வழங்கப்பட்டுள்ளது. 138 பொலிஸ் அதிகாரிகள், ஒரு மேஜர், ஒரு கப்டன், மூன்று லெப்டினன்கள் மற்றும் ஏனைய தரங்களைக் கொண்ட 50 கொமாண்டோக்களையும் சந்திரிகா கேட்டுள்ளார்.

10 சேவையாளர்கள், 62 தனிப்பட்ட பணியாளர்கள் என 260 பேர் அந்தப் பணியாளர் சபையில் உள்ளனர்.

துப்பாக்கித் தோட்டா துளைக்காத நான்கு வாகனங்கள், முக்கிய நபர்களுக்கான இரண்டு ஜீப்கள், மூன்று வாகனங்கள், அவரின் பாதுகாப்பிற்காக ஏழு ஜீப் வண்டிகள், ஒரு ருவான், ஒரு பேருந்து, 18 உந்துருளிகள் என 36 வாகனங்கள் அவருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின்படி முன்னாள் சனாதிபதி ஒருவருக்கு அமைச்சரவையிலுள்ள அமைச்சர் ஒருவருக்கு கிடைக்கும் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் ஏனைய வசதிகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.

இதன்படி அமைச்சருக்கான வாகனம், தனிப்பட்ட ஊழியர்கள் மூன்று வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்காக ஒன்று அல்லது இரண்டு வாகனங்களையே பெற்றுக்கொள்ள முடியும்.

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அவுஸ்திரேலிய அரசு வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கும் அவுஸ்திரேலியா, போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் முறைப்படியான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தல் உட்பட சகல தரப்புகளும் சமாதான நடவடிக்கைகள் குறித்து தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அலக்ஸ்ஸாண்டர் டௌனர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கையர்களின் அபிலாசைகள் மற்றும் நலன்களைப் பிரதிபலிக்கும் நீதியான மற்றும் நீடித்த சமாதானத்தை அடைவதற்கான தனது நீண்டகால உறுதிப்பாட்டை அவுஸ்திரேலிய அரசாங்கம் மீள உறுதிப்படுத்துகின்றது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நிதியமைச்சின் செயலாளராக மீண்டும் ஜயசுந்தர

சிறிலங்கா நிதியமைச்சகத்தின் செயலாளராக பி.பீ. ஜயசுந்தரவை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அவர் கடந்த திங்களன்று தனது பொறுப்புக்களை ஏற்றார். சர்வதேச பொருளாதார நிபுணரான பி.பீ ஜயசுந்தர, சந்திரிகா ஆட்சிக் காலத்தில் இருமுறை நிதித்திட்டமிடல் அமைச்சின் செயலாளராகவும் திறைசேரியின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அதற்கு முன்னர் மத்திய வங்கியின் அதிகாரியாகவும், பல நாடுகளில் பொருளாதார ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

# ஓவியர் புகழேந்தியின் "புயலின் நிறங்கள்" வரலாற்றுப் பதிவு ஓவிய நூல் வெளியீடு

(நல்லூர்)

ஓவியர் புகழேந்தியின் புயலின் நிறங்கள் என்னும் ஈழப்போர் வரலாற்றுப் பதிவு ஓவிய நூல் வெளியீட்டு விழா நேற்றுப் பிற்பகல் 3.00மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பா



ணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் சி.விஜயரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பல்கலைக் கழக ஊழியர் தொழிற்சங்கத்தலைவர் க.தங்கராசா உயர் தொழில்நுட்பநிறுவன இயக்குனர் இ.இராஜரெட்ணம் ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார்கள்.

தமிழீழ தேசியக்கொடியினை தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் குகனேந்திரன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த செல்வி.இ.யாழினி நிகழ்த்தினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து வாழ்த் துரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ் நிகழ்த்தினார்.

வெளியீட்டுரையை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டை யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவ ஞானம் வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வணிக பீட முகாமைத்துவ கற்கைநெறி பீடாதிபதி க.தேவராசா பெற்றுக் கொண்டார்.சிறப்புப் பிரதிகளை யாழ்ப்பாணம் பல் கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேரா சிரியர் வி.பி. சிவநாதன் வெளியிட்டு வைக்க நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் பெற்றுக் கொண்டா. சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் சிறபபுரையை நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை நமது ஈழநாடு துணை ஆசிரியர் இ.மேனன் நிகழ்த்தினார்.

ஏற்புரையை நூல் ஆசிரியர் ஓவியர் புகழேந்தி நிகழ்த்தினார். பெருமளவானோர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டார்கள். (41,கீ)

# புதுக்குடியிருப்பில் வீதி விபத்து குடும்பப் பெண் மரணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப்பெண் ஒருவர் மரணம் அடைந்துள்ளார். மற்றொருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்

நேற்று முன்தினமிரவு ஏழு மணியளவில் கைவேலிப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தேவிபுரம் பகுதியில் இருந்து இரண்டாம் வட்டாரம் கைவேலி, புதுக் குடியிருப்பைச் சேர்ந்த 40 அகவை உடைய மாணிக்கவேல் தெய்வானை என்பவரும் இவரது மகளான சாமினாவும் துவிச்சக்கர வண்டியில் தமது வீட்டுக்கு சென்றுகொண்டிருக்கும் வேளையில் கைவேலிப் பகுதியில் ஒடுங்கிய பாலத்தடியில் எதிரே வந்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் பாலத்துக்குள் இருவரும் வீழ்ந்தனர்.

உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது வழியில் தெய்வானை மரணமடைந்தார். மகளான சாமினாவுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு அப்பகுதி காவல்துறையினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (08)

## கற்பிட்டிக்..

படையினர் கைப்பற்றினர்.

இந்தநிலையில் இதற்குள் ரவைகள் காணப்படுவதாகத் தெரிவித்த கற்பிட்டி பொலிசாரின் விசாரணைகள் தொடர்வதாகக் குறிப்பிட்டனர்.(32)

## மகிந்த...

வருகிறது. அத்தோடு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறிப்பாக கொழும்பில் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும் இப்பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

மேலும் போர்நிறுத்த நடை முறைகளைத் தொடர்ந்தும் உள்ள வாறே பேணுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

## இந்திய...

விபரங்களை அவர் தெரிவிக்கவில்லை. இது வழமையான ஒரு சந்திப்பு என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அமைதி முயற்சிகள் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் இந்தியதென் பிராந்திய இராணுவத் தளபதியின் சிறிலங்காப் பயணம் முக்கியத்து வம் வாய்ந்த வையாக இருக்கக்கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக் கின்றன.

# "எயிட்ஸ்" விழிப்புடனிருந்து எம்மைக் காப்போம்

## தமிழீழ சுகாதார சேவை அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கொடிய ஆட்கொல்லி எயிட்ஸ் நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம் என தமிழீழ சுகாதார சேவைகள் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

டிசம்பர்-1 சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எயிட்ஸ் நோயின் தாக்கம் உலகளாவிய ரீதியில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இலங்கையில் இதுவரை 3500இற்கும் மேற்பட்டோர் எயிட்ஸ் ஏச்.ஐ.வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். தற்போது தாயகப் பகுதிகளுக்கான பாதைகள் திறக்கப்பட்ட நிலையில் தென்னிலங்கை, வெளிநாடுகள் அண்டை நாடுகளுக்கான தொடர்புகள் அதிகரித்துக்கொண்டு செல்வதாலும் எமது தாயகப் பகுதியின் யாழ். மாவட்டத்தில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையாலும், இந் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க இந் நோய்த்தொற்று ஏற்படும் வழி முறைகளில் நாம் அனைவரும் சிரத்தையுடனும், அவதானத்துடனும், செயற்பட வேண்டியதன் அவசியத்தை இவ் எயிட்ஸ் தினம் எம்மை ஞாபகப்படுத்தும் தினமாக அமைந்துள்ளது என்பதுடன் இந்நோய் தொற்றும் முறை களில் விழிப்புணர்வுடன் இருந்து எம்மைப் பாதுகாப்போம். (சோ)

## சிறிலங்கா...

மங்கள சமரவீர பேச்சுக்கள் நடத்துவார் என்றும் இலங்கை அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய வெளி விவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஆளும் கூட்டணியின் தலைவரான சோனியா காந்தி, இந்திய பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எல்.கே.அத்வானி, இந்திய வெளி விவகார பிரதி அமைச்சர் அகமது ஆகியோரையும் மங்கள சமரவீர சந்திக்கவுள்ளதாக புதுடில்லி செய்தி கள் தெரிவிக்கின்றன.

மங்கள சமரவீரவின் பயணத்தைத் தொடர்ந்து விரைவில் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், இந்தியப் பயணம் மேற்கொள்வார் என்றும் தெரிகிறது.

# இதய அஞ்சலி



## திரு. ச. முத்தையா

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், முன்னாள் அதிபர் திரு. மு. உதயசங்கர் அவர்களின் தந்தையாருமாகிய திரு ச. முத்தையா அவர்கள் 26.11.2005 அன்று கனடாவில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் 01.12.2005 அன்று நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனையொட்டி அன்னாரின் இல்லத்தில் இருந்து 02.12.2005 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் திருவுருவப்படம் எடுத்துவரப்பட்டு அஞ்சலி செய்யப்பட்டு பாடசாலைக் காரியாலயத்தில் வைக்கப்படும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பாடசாலைச்சமூகம்,
மு/கலைமகள் வித்தியாலயம்,
முள்ளியவளை. (7064)

தகவல்:-
ந.ஸ்ரீஇளஞ்சிங்கநாதன்
(ஆசிரியர்)

## மகிந்தவின்சிந்தனை

நாட்டில் நடைமுறையில் இரசாயன பசளைகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு மெற்றிக் தொன் ஒன்றிற்காக 23 ஆயிரம் ரூபா மானியமாக வழங்கப்படுகிறது.

மகிந்த சிந்தனையின்படி மேலும் நான்காயிரம் ரூபா மானியம் இரசாயன பசளைக்காக வழங்கப்பட வேண்டியுள்ளது.

மகிந்த நோக்கில் சொல்லப்படுகின்ற சமுர்த்தி நிவாரண அதிகரிப்புக்காக நான்காயிரத்து 650 மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றன.

4.2 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படவுள்ள பகல் உணவின் நிமித்தம் ஆயிரத்து 400 மில்லியன் ரூபாய்கள் அவசியமாகின்றன.

இந்த நிலையில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் குறித்த ஒதுக்கீடுகள் துண்டுவிழும் தொகையை அதிகரிக்க உள்ளன.

அதேநேரம் நிதி ஈட்டை உருவாக்கும் வழிகளையும் தேட வேண்டிய கட்டாயம் புதிய வரவு செலவு திட்டத்திற்கு ஏற்பட்டுள்ளது. (32)

## மகிந்தவின்..

தின் பிரதான அமைப்பாளருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் ஆலோசனையின் பேரில் பிரதான அமைப்பாளர் அலுவலகத்திலிருந்து அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டால் அரசாங்கம் கலைக்கப்பட்டு விடும் என்று சிறிலங்கா அரசியலமைப்புச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலையில்...

அத்துமீறல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

இன்று திருகோணமலை நகரம் முற்றுமுழுதாக சிறிலங்கா இராணுவ மயப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முடக்கப்பட்டுள்ளது.

பார்க்கும் இடமெல்லாம் இராணுவம் குவிக்கப்பட்டு வீதியெங்கும் காவலரண்கள் அமைக்கப்பட்டு எமது மக்கள் உள ரீதியாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட வண்ணமுள்ளனர். போர் நிறுத்த உடன்பாட்டை முற்றுமுழுதாக மீறி புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மனித உரிமைச் சட்டம், புதைகுழியில் புதைக்கப்பட்டு அவசர காலச் சட்டம் அரங்கேற்றப்பட்டுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு திறந்த வெளிச்சிறைக் கைதிகளாக தமிழ் மக்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கட்டைபறிச்சான் மகிந்தபுர சிறிலங்கா இராணுவ முகாமில் தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்விற்குரிய உணவு வகையினைக்கூட எடுத்துச் செல்லமுடியாத அடாவடித்தனம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் வீடு கட்டுவதற்குரிய கட்டடப் பொருட்களை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்படுகின்றது.

திருகோணமலையில் கொடுமையான யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் கூட இப்படியான கெடுபிடிகளும், அடவடித்தனமும் நடைபெற்றதில்லை.

திருகோணமலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள இராணுவ அட்டூழியங்களை உடன் நிறுத்த வேண்டும்.

சிவில் நிர்வாகம் நடைபெறுவதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. சகல இராணுவ காவலரண்களையும் அகற்றி இராணுவத்தினரை முகாம்களில் இருந்து கடமையாற்ற ஏற்பாடு செய்யுங்கள். தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்காதீர்கள்.

தமிழீழ மாவீரர் நிகழ்வின்போது நிகழ்வினைக் குழப்பி இனரீதியான மோதல்களை உருவாக்கும் முயற்சியில் சிறிலங்கா கடற்படையினர் திட்டமிட்டு தேவையற்ற சோதனை நடவடிக்கைகளையும், கெடுபிடிகளையும் மேற்கொண்டனர்.

இது சம்பந்தமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாகத் தாங்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறுவீர்களாயின் தமிழ் மக்கள் மிகவிரைவில் அகிம்சை வழியில் அமைதியான முறையில் மிகப்பெரிய அளவில் இதற்கு எதிராகப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்று அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது